# பட்டுப் பூச்சியின் பின்னுகை போலும்....

## மொழிபெயர்ப்புக் கவிதைகள்



### கெகிராவ ஸுலைஹா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L11484

# பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்...

(மொழிபெயர்ப்புக் கவிதைகள்)

கெகிறாவ ஸுலைஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111
MA

# PATTUP POOCHIYIN PINNUHAI POLUM

TRANSLATED POETRY

*Kekirawa Sulaiha*



| | | |
|---|---|---|
| Edition | : | 2009 |
| Pages | : | 127 |
| Cover | : | Memonkavi |
| Layout | : | Miss. M.F.F. Fazmila |
| Printed at | : | Wings Graphics, Galhinna. |
| Price | : | 150/- |
| ISBN | : | 978-955-51679-2-5 |



# *பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்*

(மொழிபெயர்ப்புக் கவிதைகள்)

கெகிறாவ ஸுலைஹா



| | | |
|---|---|---|
| பதிப்பு | : | 2009 |
| பக்கங்கள் | : | 127 |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | மேமன்கவி |
| தளக்கோளம்: | : | செல்வி . M.F.F. பஸ்மிலா |
| அச்சமைப்பு: | : | விங்ஸ் கிரபிக்ஸ், கல்ஹின்னை |
| விலை | : | 150/- |
| ISBN குறியீடு | : | 978-955-51679-2-5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

காலந்தோறும் நறுமணம் கமழும்
துரோகம் துளியுந்தொட்டறியா
நேசத்தின் கதகதப்பை.
கம்பீரங்கலந்த பவித்ரத்தோடு
குழைத்துப் பரிசளித்த
ஆத்ம நண்பர் உயர்திரு.
மேமன்கவி அவர்களுக்கு....!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்மைமத்துக் கவிராயர் அவர்கள் வழங்கிய அணிந்துரை

ஸுலைஹாவின் கவிமொழியில் தமிழுருவம் பெற்றுள்ள இவ்வாங்கில, பிறமொழிக்கவிதைகள் அவரது இருமொழிப் பரிச்சயத்தில் கருவாகி, உருவாகி சுகப்பிரசவம் கண்டுள்ளன. ஆங்கிலத்தில் தாம் படித்துச் சுவைத்து உள்வாங்கியவைகளைப் பரவசமூட்டும் மறுபடைப்புகளாகத் தந்துள்ளார் ஸுலைஹா.

எளிமையும், வலிமையும் கொண்ட மொழியாக்கங்கள் இவை.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள பல கவிதைகளின் பாடுபொருள் இவரது சமூகஞ் சார்ந்த பல்வேறு அக்கறைகளைக் காட்டிநிற்கிறது. பிரபல பிறமொழிக் கவிஞர்களது ஆக்கங்கள் முதற்கொண்டு சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றில் பெயரறியாச் சிறுவர்களின் கூட்டுமுயற்சியால் உருவான கவிதைவரை இம்மொழிபெயர்ப்பாளரின் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளன.

வீர சைவ நெறிநின்ற 12ம் நூற்றாண்டு கன்னடப் பெண்கவி மகாதேவியக்காவின் பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும் ஏ.கே. ராமானுஜனின் ஆங்கிலம் வழியாக ஸுலைஹாவின் அருமையான மொழிபெயர்ப்பில் இப்பொழுது தமிழுக்குக் கிடைத்துள்ளது.

மஹ்மூத் தர்வேஷ், சமி அல் காஸிம்,மொயின் பஸீஸோ, கன்சுல் வஹாப் முதலானோரின் பலஸ்தீனக் கவிதைகளும் இம் மொழியாக்கக் கவிதைத்தொகுதியில் கணிசமாக இடம்பிடித்துக் கொண்டுள்ளன.

ஆங்கிலத்தில் எழுதும் இலங்கைக் கவிஞர்கள் சிலரின்- குறிப்பாகப் பெண்கவிஞர்களின்- கவிதைகளையும் தமது தொகுதியின் மூலம் தமிழ் வாசகர்களின் கவனத்துக்குக் கொணர்ந்துள்ளார் ஸுலைஹா.

'கோப்ரல் பிரேமரத்னவுக்கு', 'அந்த ஒற்றையடிப்பாதையில் வெள்ளைக்கொடி பறப்பது கண்டு' போன்ற தமிழாக்கங்கள் இலங்கையின் போர்காலச் சூழலை நினைவுபடுத்துவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ண கொரோவராவும், குஷ்வந்சிங்கும் சேர்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பஞ்சாபிப் பெண்கவி அம்ரிதா ப்ரீதமின் நெடுங் கவிதையை அழகாகத் தமிழ்ப்படுத்தியுள்ளார் ஸுலைஹா.அது போன்றே, இலங்கைப் பெண் கவிகளான ஆன் ரணசிங்க, ஜீன் அரசநாயகம், கமலா விஜேரத்ன போன்றோரின் ஆங்கிலக் கவிதைகள் சிலவும் ஸுலைஹாவின் மொழியாக்கத்தில் இத்தொகுதி மூலம் தமிழுக்கு வளஞ்சேர்க்கின்றன.

மொத்தத்தில், இது தமிழ்க்கவிதைப் பிரியர்களுக்கு விருந்து படைத் துள்ள நல்லதொரு தொகுதி.

ஸுலைஹாவுக்கு என் பாராட்டுக்கள்.

பண்ணாமத்துக் கவிராயர்
26A, போகஹகொட்டுவ ரோட்
மாத்தளை
2009.06.06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழின் அகரமே கூடச் சரியாகத் தெரியாத சின்னஞ்சிறு வயதில், அப்போது எமது ஆங்கில ஆசானாக நமக்கு வாய்த்திருந்த பண்ணாமத்துக் கவிராயர் திரு. S.M.பாரூக் அவர்களே, ஆங்கில மொழியின் பால் எனக்குள் முதல் கனவு விதைத்தவர் என்பேன். எனது தனிப்பட்ட வாழ்விலும் சரி, உத்தியோக வாழ்விலும் சரி நான் நானாக வாழ நேர்ந்து தவறுவிட்ட சந்தர்ப்பங்களைத் தவிர்த்துப் பார்த்தால், நான் 'பாரூக் ஸேராக' வாழ நேர்ந்த சந்தர்ப்பங்களும், வாழ முயற்சித்த சந்தர்ப்பங்களுமே அதிகம் என்கிற அளவுக்கு அவர் என் லட்சிய முன்னோடியாகத் திகழ்ந் திருக்கிறார். மொழிபெயர்ப்புத்துறையின்பால் எனது தீராத் தாகத் துக்கும் அத்துறைமீது அவருக்கிருந்த கவிதா ஆற்றலே காரண மாக அமைந்தது.

அதன்பின்னர், வாழ்வின் யந்திரத்தனமான வேலைப்பளுவின் கார ணமாக, இலக்கியத்தின்பால் இருந்த கவனத்தைப் புறந்தள்ளிவிட்டு வெறுமனே வாழ நேர்ந்த போதெல்லாம் உரிமையோடு கடிந்து கொண்டு, எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த நேசகர் உயர்திரு. மேமன்கவி அவர்கள், என்னால் மறக்கமுடியாத மாம னிதர் என்பேன். நவீன ஆங்கிலக் கவிதை நூல்களை தனக்கு முடிந்தபோதுகளிலெல்லாம் வாங்கி வாங்கித்தந்து, அத்துறையிலே எனது அறிவு விசாலிப்பதற்கு அவர் வழி காட்டினார். வெறும் கனவாகயிருந்த மொழியாக்கக் கவிதை நூல், நனவாக உருப் பெற அவரே மூலகர்த்தா. உண்மையைச் சொல்வதானால், இக் கவிதை நூற்றொகுதியை அவருக்குச் சமர்ப்பித்திருப்பது கூட, ஒரு குறைந்தபட்சக் கைமாறுதான்.

போரும், போர் உருவாக்கிய வன்முறையும் மனித வாழ்வில் ஏற்ப டுத்தியிருக்கிற நிச்சயமற்ற தன்மையையும், அதனால் விளைந்த விடுதலையின் மீதான தாகிப்பையும் கருவாகக் கொண்ட கவிதை கள் இக்கவிதைத்தொகுப்பிலே அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். நேர்மையீனமும், அன்பின்மையும் நிகழும்போதெல்லாம், அந்த அனுபவம் ஏற்படுத்தியிருக்கிற காயத்தை, அதை அனுபவித்தவ னோடு சேர்ந்து நானும் அனுபவிக்க நேருகிறது.அப்போதெல்லாம், அவ்வாறான கவிதைகளை மொழியாக்கம் செய்வதன் மூலமாக வேனும், அவனது வலியை என் வலியாக உணரவும், மட்டுமன்றி அவனது வலிக்கு-அவனது கண்ணீருக்கு ஒத்தடம் கொடுத்த திருப்தி யையும் நான் அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்புகளற்ற, அன்பு குடிகொண்ட ஒரு பூமிக்கான தேடல் களாக ஒலிக்கின்ற இக்கவிதைகள், ஆங்கில மொழிக்கவிதைகளின் இறுக்கத்தையும், அழகையும், உணர்ச்சியையும் அப்படியப்படியே பிரவாகம் செய்யும் விதமாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து, வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். ஆயினும், இயன்றவரை அப்பணியை நான் சரியாகச் செய்ததாகவே நம்புகிறேன்.

இத்தொகுப்பிலுள்ள பலஸ்தீனக் கவிதைகள், பலஸ்தீனத்துடனான இலங்கையின் ஒன்றிப்புக்கான குழுவின் பொதுச்செயலாளராக விளங்கி வரும் திரு.T.Jayasinghe அவர்களால் தொகுக்கப்பட்ட 'Palestinian Poetry' நூலிலிருந்து பெறப்பட்டவை. அந்நூலை எனக்கு அனுப்பி வைத்திருந்த திரு. T. Jayasingheவை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

ஏனைய பெரும்பாலான கவிதைகள் திரு.மேமன்கவி அவர்கள் எனக்கு வழங்கிய நூல்களிலிருந்து பெறப்பட்டவை.

சில கவிதைகள் ஆங்கிலத்துக்கான எனது தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்காக நான் கற்க நேர்ந்தவை. அவ்வகையில்,எனது ஆசிரியர்களான திரு.சுனில் சந்ரா பண்டார (இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி கண்டி), திரு.D.A.வேஹெல்ல (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக ஆங்கிலப் பிரிவின் தலைவர்-மிஹிந்தலை), திருமதி N.D.ஜயசிங்க (இலங்கை ரஜரட்ட பல்கலைக் கழகம்-மிஹிந்தலை) போன்றோர் நன்றியோடு நினைவு கூறவேண்டிய வர்கள்.

Otto Rene Castillo வின் கௌதமாலாக் கவிதையும், Ingrid Piying Lia வின் கவிதையும் எனது அன்பு மாமா திரு.பைஸல் ஜுனைதீன் அவர்களது கோப்பிலிருந்து நான் பெற்றுக் கொண்டவை.

இக்கவிதைத் தொகுப்பில் எனது பிழைகளைச் சுட்டி, என்னை வழிநடத்திய எனது அன்பு அக்கா கெகிறாவ ஸஹானா எப்போதும் என் நன்றிக்குரியவள்.

அம்ரிதா ப்ரீதமின் 'The Annunciation-அறிவிப்பு' கவிதை, பண்ணாமத்துக் கவிராயர் அவர்களால் ஸஹானாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிதைத்தொகுப்பை நான் எடுத்துச் சென்ற போதெல்லாம் முகமே சுளிக்காது, தனது அத்தனை வேலைப்பளுக்களுக்கிடையேயும், எனக்குப் பல அறிவுரைகள் கூறி, என்னை வழிநடத்தி, இந்நூலுக்கான அணிந்துரையையும் வழங்கிய பண்ணாமத்துக் கவிராயர் அவர்களை என்றென்றும் மறவேன்.

அட்டைப்படத்தை தனது வேலையாகக் கருதி, அழகுற வடிவமைத்த திரு.மேமன்கவியவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றிகள். அத்துடன், இந்நூல் அச்சில் வருவதற்குப் பெரிதும் உதவிய திரு J.M.நிவாஸ (Director-British College of Applied Studies-Kandy) அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

இந்நூலுக்கான கணனி வடிவமைப்பில் சிரமமேதும் பாராது, இரவுபகலாய் உட்கார்ந்து என்னோடு ஒத்துழைத்த எனது அன்பு மாணவி செல்வி F.பஸ்மிலா பைஸல் நான் நன்றியோடு நினைவு கூறவேண்டியவள்.

மற்றும், இக்கவிதை நூலுக்காக எல்லாவகையிலும் எனக்கு ஒத்துழைத்து, உற்சாகம்வழங்கிய என் தங்கை மும்தாஜ் முபாரக் ஒரு மனைவியின் கடமைகளிலிருந்து நான் தவறிய போதெல்லாம் என்னைப் பொறுத்துக் கொண்டு இதற்கான முழு வேலைகளிலும் எனக்குதவிய எனதன்புக் கணவர் திரு. H.L.M.ஹனிபா, அவ்வப்போது ஓடியோடி வந்து, எனது தட்டெழுத்து வேலைகளில் எனக்குதவிய என் குட்டி மகள் சகீனத் அனைவரையும் நன்றியோடு நினைக்கிறேன்.

கெகிறாவ ஸுலைஹா
2009.06.01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

*கவிதைகள்* *பக்கம்*

**நம் நாட்டுக்கவிதைகள்**


| | | | |
|---|---|---|---|
| 1. | கனாக்கள் செத்துக் கொண்டிருக்கின்றன... | A.A.Latheef | 14 |
| 2. | அடையாளங்கள் | Nimal Somarathne | 16 |
| 3. | நேர்மையான சமூகம். | Basil Fernando | 18 |
| 4. | கற்புக்கரசி | Alfreda de Silva | 20 |
| 5. | அரையிருட்டில் ஒரு பாடல் | Anne Ranasinghe | 21 |
| 6. | பிரிவின் பரிசாக... | Richard De zoysa | 22 |
| 7. | நாற்பதின் வாயிலில் என் அன்னையின் நினைவுகளில் நின்று... | Mirror ,May 1995 | 24 |
| 8. | உன்னையிழந்து நான்... | Roshani Jayathilake | 26 |
| 9. | ஒரு படை வீரனின் மனைவி அழுகிறாள் | Kamala Wijerathne | 28 |
| 10. | காலைச் சூரியனையும் காணாமலாக்கி.. | Amirthanjali Sivapalan | 31 |
| 11. | காலமும் இடமும் | Anne Ranasinghe | 33 |
| 12. | கோப்ரல் பிரேமரத்னவுக்கு ஒரு அஞ்சலியுரை | Suresh Canagarajah | 37 |
| 13. | அகதிகள் | Jean Arasanayagam | 40 |
| 14. | கள்வர்கள் வந்து... | Prianthi Wikramasuriya | 42 |
| 15. | அந்த ஒற்றையடிப்பாதையில் வெள்ளைக்கொடி பறப்பது கண்டு.. | Kamala Wijerathne | 43 |
| 16. | அரசியல் கைதி | Jean Arasanayagam | 45 |
| | **பலஸ்தீனக் கவிதைகள்** | | |
| 17. | பிரிவின் பின்னே... | Abu Salma | 48 |
| 18. | பலஸ்தீனத்துக்குத் திரும்பியபடி... | May Sayegh | 51 |
| 19. | ஒரு குடிமகன் திரும்பி வருகிறான்... | Kanzul Wahab | 52 |
| 20. | பலஸ்தீனத்தின் அழுகை | Kanzul Wahab | 54 |
| 21. | பலஸ்தீனத்துக்குக் காதலுடன்... | Kanzul Wahab | 57 |
| 22. | பலஸ்தீனத்திலிருந்து ஒரு கவிதை | Mu'in Basisso | 58 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 23. இலண்டனில் ஒரு பலஸ்தீனியன் | Ahmed Yassin | 59 |
| 24. பலஸ்தீனத்தின் போராளிகள் | Yousef Al-Khathib | 60 |
| 25. படைத்தளபதிகள் பேசுகிறார்கள் | Kanzul Wahab | 61 |
| 26. பலஸ்தீனத்திலிருந்து ஒரு பாடல் | Mahmoud Darwish | 63 |
| 27. பலஸ்தீனத்திலிருந்து ஒரு பாடல் | .................. | 64 |
| 28. ரஃபாவின் குழந்தைகள் | Samih Al-Qasim | 66 |
| 29. நகரங்களின் பூவே.... | Fayrous (famous Lebenese singer) | 67 |
| 30. கனவு-காட்சி-நிஜம் | Kanzul Wahab | 69 |
| 31. எனக்குச் சொந்தமானதை நான் கேட்கிறேன் | Kanzul Wahab | 71 |
| **பிறநாட்டுக்கவிதைகள்** | | |
| 32. நேஸம் | Roy Croft | 74 |
| 33. மெது நடனம் | sent by Dr.Dennis Shield | 76 |
| 34. இளம் மனைவி | D.H. Lawrence | 78 |
| 35. பயம் | Gabriela Mistral | |
| 36. ஆபிரிக்காவே! | மூலம்:David Diop | 80 |
| | ஆங்கிலத்தில்:Ulli Beier | 82 |
| 37. என் தாமரைப்பூவுக்கு... | Umanath Bhattaacharya (Tr.from Bengali) | 83 |
| 38. முடிவுரை | Jayasree Bhadra | 84 |
| 39. இன்று | Tanya Ferdnandusz | 85 |
| 40. என் ஹிருதயம் | Pygmy (Africa) | 86 |
| 41. மகிழ்ச்சியின் எதிர்பாராப் பாடல் | Iglulik Eskimo | 87 |
| 42. நான் சிறுவனாயிருந்தபோது.... | Eskimo (arctic) | 88 |
| 43. ஞாபகம் வருமா எனக்கு? | Richard J.Margolis | 89 |
| 44. பறவையின் பாட்டு | Anonymous child written in Terezin Concentration Camp | 90 |
| 45. வானத்தறியினது பாடல் | Tewa Indian | 91 |
| 46. நானே அந்தத் தாள் | From the Russian of Marina Tsvetaeva Tr. By Reggie Siriwardena | 92 |
| 47. N.P.க்கு... | From the Russian of Anna AkmatovaTr.by Reggie Siriwardena | 93 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 48. ஒரு தூரத்துக்குரல் | From the Russian of Anna Akmatova Tr.by Reggie Siriwardena | 94 |
| 49. அறிவிப்பு | மூலம்: Amritha Pritam Tr.by Krisna Gorowara And Kuswanth Singh | 95 |
| 50. பொறாமை | Ruth Ellison | 101 |
| 51. உறக்கம் | Lou Lipsitz | 102 |
| 52. புதிராகி... | Soudararaj | 103 |
| 53. பறவையின் திருமணம் | Divik Ramesh(in Hindi) Tr.by Arun Sedwal | 104 |
| 54. Margot Heinmann க்கு... | John Conford | 105 |
| 55. பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்.. | மூலம்:Mahadeviyakka Tr.by:A.K.Ramanujam | 107 |
| 56. ...................... | Ingrid Piying Lia | 108 |
| 57. தனித்திருப்போர் தம் பாதை | Gullierimo E.Varela | 109 |
| 58. ஒரு சந்தியாகால மாலையில் | Anonymous Children in Terezin Con. Camp | 110 |
| 59. மன உக்கிரம் | Greta Cordeiro | 111 |
| 60. ஞாபகங்கள் | Kirthi Sharma | 113 |
| 61. ஒரு கௌதமாலாக்கவிதை | OttoRene Castillo | 114 |
| 62. சோம்பேறி | Pablo Neruda | 116 |
| 63. உறவுகள் | Hallmark | 118 |
| 64. இலையுதிர்காலம் | T.E.Hulme | 120 |
| 65. அந்தக்குரல் | Navajo Indian | 121 |
| 66. மழைமுகில்களுக்குப்பின்னால் மறைந்துபோன சூரியனுக்கானதோர் பாடல் | Primitive African (Hottentot) (ஆங்கிலத்தில்:Ulli Beier) | 122 |
| 67. சாயங்காலத்தீவு | மூலம்: Harry Martinson(Swedish) May Swenson | 123 |
| 68. நட்சத்திரங்கள்-பாடல்கள்-முகங்கள் | Carl Sandburg | 124 |
| 69. அந்த வானம் | Primitive African(Ewe) ஆங்கிலத்தில்: Ulli Beier) | 125 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் நாட்டுக்கவிதைகள்

L. 11484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனாக்கள் செத்துக்கொண்டிருக்கின்றன...

*A.A.Latheef*


கனாக்கள் சாகின்ற காலமா இது?
கொடூரக் கொலைகளுக்கும்,
இரக்கமற்ற இறப்புகளுக்குமென்றே
திறந்துவிடப்பட்ட பருவகாலமோ இது?
வாழ்வென்பது பெறுமதிமிக்கதாய் இல்லை. ஆயினும்,
உன்னதமான
தர்ம நிலைக்களம் மீதிருந்து
மரணதண்டனைகளுக்கு மட்டும்
நாம் கண்டனங்கள் கூறுகிறோம்.
திரைவழியே செய்திவாசிப்பாளர்
அகன்று அப்பால் போகுமுன்னர்,
என் பிள்ளைகள் உண்ணத்தூண்டும் உருசியான பழங்களை
எண்ணிப்பார்ப்பதுபோலோர் மகிழ்ச்சியுடன்
மரணங்களை எண்ணுகிறார்கள்:
விளையாட்டுப்போட்டிகளிலே,
"ஸ்கோர்"களையும்,"கோல்"களையும்
குவிப்பதுபோலோர் மகிழ்ச்சியுடன்,
எண்ணிக்கைப்பற்றி அவர்கள் விவாதிக்கிறார்கள்.
எங்கே எங்கள் கனாக்கள்...?
குதூகலித்துச் சிரிக்கின்ற குழந்தைகள்,
அமைதி குடிகொண்ட மனைகள்
சாந்தி, சகோதரவாஞ்சை
எல்லாமும் எங்கே போயின?

கல்லிற் செதுக்கிய தெளிவான
ஒளிமிகு சிலையொன்று,
நேற்றென் கனவில் ....!
நம் தேசத்தின் எல்லா
உயிரற்ற சிலைகளும்கூட
கண்ணீர்சிந்தி அழுதிருக்குமோ?
மனிதா!
இறுகிப்போன மூலப்பொருளினாலா
நாம் ஆக்கப்பட்டோம்...?
தூக்கத்தில் கூட
நாம் இனி தப்பித்தோட வழியேதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்
கனாக்கள்
செத்துக்கொண்டிருக்கின்றன...
ஏனெனில்,
கொடூரக் கொலைகளுக்கான
பருவகாலம் இது.
என் வசம்
இனி
சிந்தப்படக்
கண்ணீர் இல்லை!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளங்கள்

*Nimal Somarathne*

என்னை என்றுமே நீ
அறியாதிருந்த போதிலும்,
உன் சொந்த நன்மைக்காய்
நீ எனக்கு பெயர் சூட்டினாய்!
இளமையின் வீர்யத்தோடு
நான் மலர்ந்தபோது,
என்னை நீ சந்தேகித்தாய்.
கசப்பில் வதங்கிப்போனேன்
நான் வாடி.

சுதந்திரத்துக்காய் நான் கூக்குரலிட்டபோது,
என்னை நீ அடித்து நொறுக்கினாய்;
வலியின் துயரில் நான் ஓலமிட்டழுதபோது,
என் புலம்பலின் சுதியோடு நீ
இசை கூட்டி பாடலிசைத்தாய்.
கெஞ்சிக்கேட்டேன்; மன்றாடி நின்றேன்.
கேட்டாயில்லை, எச்சரித்துப்பார்த்தேன்.
நீயோ கேலி செய்தாய் -ஆதலினால்,
வெறுப்பும் கசப்பும் வளர்ந்தன.

நான் வாதிட்டேன்.
என்னை நீ கலகக்காரன் என்றாய்.
மக்களிடம் பொய்யே பேசிய நீ
தலைவன் எனப்பட்டாய்.
உறங்கிக் கிடந்த ஜனக்கூட்டத்தை
தட்டி நான் எழுப்பியபோது,
என்னை நீ சந்தர்ப்பவாதி என்றாய்.
மக்களை நீ கொன்றுகுவித்து,
தேவை கருதியென சாட்டும் சொன்னாய்.
உன் சொந்த நன்மைக்காய்!!

வடக்கிருந்தும், தெற்கிருந்தும்
நியாயத்துக்காய் நான் சண்டையிட்டபோது,
என்னை நீ தீவிரவாதியென்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் உன் சொந்த நன்மைக்காய்
ஆயுதங்களை நீ கையிலேந்தியபோது,
நீ தேசாபிமானியானாய்.
என்னை நான் பாதுகாக்கக் கருதியபோது,
நான் மட்டும் பயங்கரவாதியானேன்;
சிறுபான்மைக்காய் நான் பேசியபோது,
நான் ஈழவாதி என்றானேன்.
பிரிவினையை எதிர்த்தபோதோ
நான் இனவாதியானேன்.
எப்போதும் உன் சொந்த நன்மைக்காய்,
எனக்கு நீ பெயர் சூட்டினாய்.

பாழ்பட்ட வீதியொன்றின் மூலையிலே,
டயருக்குள் என்னுடல் வெந்தபோது,
நாய்களுக்கும், காக்கைகளுக்கும்
என் பாதி வெந்த உடல் விருந்தானபோது,
கவிழ்ந்துபோன நம்பிக்கைத் துரோகியாய்
என்னை மற்றோர் கருதிடவைத்தாய்.
என் அடையாளம் என்னவென்று
நீ என்றுமே அறிந்திருந்தாயில்லை;
அறிய முயற்சித்தாயுமில்லை.
ஆயின், நீ யார்?உன் அடையாளமென்ன?
எனக்குச்சொல்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையான சமூகம்

*Basil Fernando*

அந்தக் கட்டடங்களுக்குத் தீமூட்டி.
என்னை நீ சிறையிலிட்டாய்!
அவர்களது சிசுக்களை
எரியும் நெருப்புக்குள் எறிந்துவிட்டு. என்னை
மனுஷத்தன்மையில்லாதவன்
என்று நீ கூவினாய்!
பட்டப்பகலில் வெட்டவெளியில்
கொலைகள் பல செய்துவிட்டு
என்னை ரத்த தாகம் பிடித்தவன் என
நீ குற்றம் சாட்டினாய்.
என் அயலானை அகதியாக்கிவிட்டு.
என்னை நீ பொறுப்பேயில்லாதவன் என்றாய்.
பாடுபட்டு அவர்கள்
தேடிச்சேர்த்த சொத்துகளை
கொள்ளையடித்து விட்டு.
என்னை நீ மகா கள்வனென்றாய்.
சிலரைச் சிறையிலிட்டு.
பலரைக் கொலையும் செய்து.
எனக்கு நீ மிருகம் எனப் பெயர்சூட்டினாய்!
அயோக்கியர்களுடன் உறவு கொண்டாடி.
அதற்கெனைப் பலியாக்கியும் விட்டு.
குற்றம் சுமத்தல்களை என்மீது வாரியிறைத்தாய்!

நான்
என் பள்ளித்தோழனின்
சடுதி மரணப்போதில்.
என் அயலானின்
திடீர் மறைவுப்போதில்.
என் நண்பன் வேறு புகலிடம் நாடி.
இந்தக் கும்பலிடமிருந்து
தப்பியோடிய போதுகளில்.
என் குருவின் இன்னோர் நாட்டுக்கான
இடம்பெயர்வுப்போதில்.
துறைமுகத்தினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் கையோடு என் பணியாளுக்கு
விடைகொடுத்தனுப்பிய போதில்,
ஏலவே
இறந்து புதையுண்டு போனவன்!
இப்போது
இந்த அவமானத்தை
ஆற்றாமையோடு சகிக்கவேண்டிய
நிர்ப்பந்தங்கள்!!

அப்பாவிகள் மீது குற்றங்கள் பல சாட்டி,
அதுவே சமாதானம் என்கிறாய் நீ.
குற்றவாளிகள் தப்பிக்க பல வழிகள் செய்து,
அதுவே பலம் என்கிறாய் நீ.

மக்களிடையே பொய்களைப் பரப்பி,
நிலைகொள்ளாமலாக்கி,
அவர்கள் காயம்பட்டுப் பிரிந்துகிடக்கையில்,
தேசத்தார் மீது கேலிச்சிரிப்புதிர்க்கிறாய் நீ!

நீ நிம்மதியாய் உறங்குகிறாய்.
என்னால் அது முடியவில்லை.
நீ விதம் விதமாய் உண்கிறாய்.
நான் என் பசியைத் தொலைத்துவிட்டேன்.
நீ நண்பர்களைப் பெற்றிருக்கிறாய்.
நான் இருந்தோரையும் இழந்துவிட்டேன்.
நீ வென்று விட்டதாய்
உனக்குள் எண்ணிக்கொள்ளலாம்.
ஆயினும்,
இந்த அவமானத்தின் ஞாபகங்களும்,
இந்தத் தோல்வியின் காயங்களும்,
என்னோடு
நீண்டு நெடுங்காலம்வரை வாழலாம்.....!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்புக்கரசி

*Alfreda de Silva*

நீ போவதையே
நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.
உன் படகு
வான வளையத்துள்ளே
சூன்ய வெறுமைக்குள்
ஏறியுமிறங்கியும்,
அமிழ்ந்தும் தோய்ந்தும்,
காற்றில் அள்ளிச் செல்லப்படுகிறது.
ஒவ்வொரு நாட்களினதும் தறிக்குள்
என்னை வீசியெறிவது
பாரிய குழப்பமா இல்லை.
பெருத்த வெறுமையா...?
எதுவென்று என்னால் இனம்காண முடியவில்லை.
சுவாரஸ்யமிழந்து போன அடுப்பங்கரை,
உமி நீக்கப்படாமலேயே
உரலுள் உறங்கும் தானியங்கள்,
திருத்தம் தேவையாயிருக்கும் என் வீட்டின்
நொறுங்கி விழக்கூடிய கூரைப்பகுதிகள்,
ஆர்வம் பூக்க,
சிரிப்புக்காய்க் காத்திருக்கும் நம் மகன்,
மறுபடி மறுபடி உருவாகும்
ஆத்திரமும் துயரமும்
பிரம்மச்சரியம் பூண்டிருக்கும்
என் படுக்கைமீதில் போர்வையிட்டிருக்கிறது.

ஓ! அளவிட முடியாதபடி
வீணெனவாகிப்போன வருஷங்கள்!
நிலவு,
சமுத்திர அலைகளை
அப்பால் இழுத்துச் செல்கிறது.
என் கருப்பையோ
நான் உலர்ந்து போகும்வரை,
என்னைக் குடித்திருக்கிறது.
இனி கனிகளுக்கிங்கே வாய்ப்புகளில்லை.
எப்போதாவது திரும்பி வருவதாயின்,
என் விதையினை எனக்காய் எடுத்துவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிருட்டில் ஓர் பாடல்

*Anne Ranasinghe*

இந்தக் குறுகிய இரவில்
தீபத்தின் சுடரை இன்னும் கூட்டாதே.
வயல்வெளியினூடே
மிகுந்த ஆவலோடு இரைகிற
தென்றலின் ஓசையைச் செவிமடுத்தபடி
நானும் நீயும் அமர்ந்திருப்போம்.

வெள்ளைப்பனி படர்ந்த புல்வெளியினூடே
வீசியடிக்கும் தென்றல் காற்றின் பாடலால்
என் இதயம் திணறுவதை
உன்னால் கேட்க முடியவில்லையா?

பார்! தன்னந்தனிமையிலே
நின்று செழித்த தென்னையினை
தொட்டணைக்கும் பால்நிலவை.
அவை
மிக நெருக்கமாயிருப்பது போலிருக்கின்றன.
ஆயினும்,
நீலவானத்தினதும் தென்றல் காற்றினதும்
விஸ்தீரணம் அவற்றுக்கிடையே
வியாபித்துக்கிடக்கிறது.
நானும் நீயும்
அந்த
நிலவும் மரமும் போல.
நான் போவதற்கான நேரம்
நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை
நீயும் நானும் அறிவோம்.
எனவே,
தயவுசெய்து, மிகவும் தயவுசெய்து
இந்த குறுகிய இரவில்
தீபத்தின் சுடரை இன்னும் கூட்டாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவின் பரிசாக!

*Richard De Zoysa*

கிறிஸ்மஸ் பண்டிகை.
என் ஹிருதயம் மீதில்
நீ கிடத்திப்போனாய்
உனதான பரிசாக ஒரு டயறி.
நான் எதிர்கொள்ளக் காத்திருக்கும்
பல்லாயிரக்கணக்கான கணங்களோடு
அதன் பக்கங்கள் விரிந்து கிடக்கின்றன.
ஒவ்வொரு துயரத்துக்குமாய்!

அந்தப் பரிசே கொடூரமாய்!
ஒரு வருஷமோ,
அதற்குமதிகமான காலமோ
நீ என்னை விட்டுப் பிரிந்திருப்பாய்.
எனினும் நீயறிவாய்,
ரத்தமும் சதையுமாய் குழைத்தெடுக்கப்பட்ட
ஞாபகங்களின் கலவையென
உனதான பரிசாக
இந்த டயறி மட்டும் என்னோடு!

கிறிஸ்மஸ் பண்டிகை.
நீ எனக்கொரு டயறி தந்தாய்.
புது வருஷமோ
இன்னும் பழசாகவில்லை.

ஆயினும்,
நான் பிணம் போலக் கிடக்கிறேன்,
இதில் மீதமிருக்கும்
எழுதப்படாத வெள்ளை
வெற்றுத் தாள்களென....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ***Richard De Zoysa-***

இலங்கையின் புரட்சி ஆங்கிலமொழிக் கவிஞராக மிளிர்ந்தவர்.தன்
32ம் பிறந்தநாளுக்கு சில மாதங்களே இருக்கையில், பெப்ரவரி 1990ல் அகோரமாய்க் கொலை செய்யப்பட்டவர். நாடகாசிரியர்; நடிகர்; பத்திரிகையாளர்; ஒளிபரப்பாளர்; சமூக சிந்தனைவாதி; மனித உரிமைப்போராளி.
Angela De Silva என்கிற புனைப்பெயரிலும் கவிதைகள் எழுதியிருக்கிறார்.'This Other Eden' என்கிற இவரது கவிதைத் தொகுப்பு, அவரது உயர் இலட்சிய சமூகசிந்தனைக்கு எடுத்துக்காட்டாகும். இது அத்தொகுப்பிலிருந்து
பெறப்பட்ட ஒரு கவிதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பதின் வாயிலில் என் அன்னையின் நினைவுகளில் நின்று!

'Mirror' சஞ்சிகை May, 1995
(சர்வதேச அன்னையர் தினத்தைச் சிறப்பிக்குமுகமாக...)

என் பெருமதிப்புக்குரிய இனிய பெண்ணே!
நான் பிறக்குமுன்னே பிரார்த்தனைகளால்
எனக்குப் போஷணையும், ஊட்டமும் ஊட்டிய
அழகிய ஆன்மா உனது.
உன் ரத்தத்துளிகளைப் பாலாக்கி
உன் முலையூடு
எனை நீ உறிஞ்ச அனுமதித்தபோது,
எந்தெந்த நம்பிக்கைகளை,
எந்தெந்த எதிர்ப்பார்ப்புகளை
நீ எனக்கு ஊட்டினாய்?

நான் நல்மனிதனாய் உருவாக்கப்பெறலில்,
எந்தெந்த துயரால், எத்தகு வேதனைகளால்
நீ பாதிக்கப்பட்டாய்?
சின்னச் சின்ன சந்தோஷங்கள் தந்தேனும்
இந்த நெடும்வழியில் உனை நான்
சிலிர்ப்பூட்டினேனா? சிலவேளைகளில்,
உன் இரவுகளை இருள் படுத்தியதுபோல,
என்றேனும் உன் பொழுதுகளை
நான் ஒளியூட்டினேனா? இல்லை,
இராக்களின் உன் மொத்தக் கவலைகளுக்கும்
நானே காரணமாயிருந்தேனா?

என்றாலும்,
உன்னை நேஸித்தேன் காலமெலாம்.
நான் உன் முதல் பிரசவம்.
உன் இருபத்தொன்றின் அன்பளிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நேஸித்தேன் பல காரணங்களுக்காய்.
தாயே, சகோதரியே, தோழியே...
இந்த உலகை அழகிய கண்களால் பார்க்க
உணர்வாய், மூலமாய், உயிராய்
நிரம்பி நீ நின்றாய். நன்றிகள் தாயே!

நான்கைந்து வயதில்
நான் சொன்னதில், செய்ததில் மகிழ்ந்து நீ
நாதவொலி சிந்திச் சிரித்ததை
இப்போதும் கேட்கிறேன்.
வரண்ட சிறு தருவாயின் பின்னே
பெய்த முதல் மழையில்,
உன்னோடு நடமிட்டதை ஞாபகித்துப் பார்க்கிறேன்.

நாற்பதுகளின் வாயிற்படி நின்று
கடந்த இனிப்பும், கசப்புமான காலச்சுவடுகளை
நான் அசை போடுகிறேன்.
எதிர்வரும் ஒருநாளுக்காய்,
எதிர்ப்பார்ப்புகளோடும், சஞ்சலத்தோடும்
நான் காத்துக் கிடக்கிறேன்.
அமைதி நிறைந்த என் இரவுகளில்,
உனதன்பின் நிறைந்த பிரகாசத்தையெண்ணி
வியந்தபடியிருக்கிறேன்.
என் பெருமதிப்புக்குரிய அன்னையென
காலங்கள் தோறும்
பூஜித்துக் கிடப்பேன் உன்னை...!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னையிழந்து நான்!.

*Roshani Jayathilake*

எந்தளவு உன்னையிழந்து நான் தவிக்கிறேன்
என்பதைச்சொல்ல என் வசம் வார்த்தைகளில்லை.
வாழ்வைத் தொடர்ந்து கொண்டு செல்ல
நீ என்னோடு விட்டுச்சென்ற
ஞாபகங்களும், உணர்வுகளும்
எனக்குக் கொஞ்சம் உதவுகின்றன.
'எனக்காகக் கூட யாரோ இருக்கிறார்களே.'
என்றெனை உணருதற்கு வழிசெய்த,
நீ எனக்களித்த காதலுக்காய்,
கடவுளுக்கு நான் நன்றி கூறுகிறேன்...
நீ எங்கிருந்தாலென்ன?
என் இதயத்தின் ஆழத்தே,
கருணையும், காதலும் சொட்டும்
வார்த்தைகளைப் புதைத்துப் போனமையால்,
என் இதயத்துள்ளே நீ எப்போதும் வாழ்ந்திருப்பாய்.
அந்தக் காதலும், கவனிப்பும்
எங்கேயும் காண்பதற்கில்லை.
அந்த சுகங்களும், வசதிகளும்
கடந்த காலத்தில் அனுபவிக்க எங்கேயுமில்லை.
உன்னைக் கண்ட அதிஷ்டநாள் வரைக்கும்
எந்தன் கனாக்கள் எதுவும் நனவானதில்லை.
உயிரே, இறுதியாய் நனவான
என் கடைசிக் கனா நீயே....!
நீ என்னருகேயில்லாத போதுகளில்,
எனக்கென இவ்வுலகில் எதுவுமில்லை.
என் வாழ்வு முழுதும்
உனைத்தவிர எனக்கு யாருமில்லை.
என் இதயத்தையும், உணர்வுகளையும் மட்டுமன்றி
என் முழு வாழ்க்கையையே நீ மாற்றினாய்.
வாழ்வின் புதுப் பக்கமொன்றைப் புரட்ட உதவி,
நீ எனக்கு நன்னம்பிக்கையூட்டினாய்.
என் வாழ்வு முழுதும் நான் கண்டிராவண்ணம்
காதலும், ஈர்ப்பும் எதைக் கருதுகிறது என்று
எனக்கு நீ கற்பித்தாய்.
காதலிப்பதுவும், காதலிக்கப்படுவதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புதிய அனுபவம்; ஆயினும், அழகனுபவம்.
என்றென்றும் இக்காதல் நீடிக்கவும்,
என்றும் உண்மையாயிருப்பாய் என
நான் நம்புகிற நின் நிழலில்,
புத்தம் புதிதாய் நான் வாழ்வு தொடங்கவும்,
ஒவ்வொரு நாளும் நான் எந்தளவு பிரார்த்திக்கிறேன்
என்பதை நான் சொன்னால் நீ நம்ப மாட்டாய்.
எதுவுமே பிழையாகிப் போகாதிருக்க
நான் அடிக்கடி பிரார்த்திக்கிறேன். ஏனெனில், முடிவுவரை
நான் உண்மையாகயிருப்பேன்.
நல்லது என் நண்பனே..! உன்னோடு
என் வாழ்வை சந்தோஷமாய்ப் பகிர்ந்திருக்கவே
நான் நம்புகிறேன்.
வாழ்வதற்கான நம்பிக்கையை நீயூட்டினாய்.
என்னுயிர் இந்தக் கூட்டிலிருக்கும்வரை,
உன்னைக் கவனிக்கவும், காதலிக்கவும் மட்டுமே
நான் இப்போது எதிர்ப்பார்க்கிறேன்.
எத்தனை அருமையான மனிதன்
நீ எனச் சிந்திக்கையில்,
நான் ஸ்தம்பித்துப் போகிறேன்.
என் இருள் மேகங்களை
நீ துடைத்து விரட்டினாய்.
என் பக்கங்களிலெல்லாம் நீ சந்தோஷமே
பூத்துக் குலுங்கச் செய்தாய்.
ஆதலினால்,
உன்னை, உன் விலைமதிப்பற்ற காதலை
எண்ணியபடியிருப்பது என் இதயத்துக்கு
இதமளித்தபடியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு படைவீரனின் மனைவி அழுகிறாள்.

*Kamala Wijerathna*

விடுமுறை முடிவுற்று
சென்ற சனியன்று நீ போனபோது,
அந்தத் தெரு வளைவில்
நீ மறைகின்ற வரையில்
நான் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.
புத்தர் பெருமான் முன் விளக்கேற்றி
மனம் ஆறுதலடையும்வரை
உனக்கான என் பிரார்த்தனைகள்
தொடர்ந்தபடியிருந்தன.

புதனன்று,
வெற்றுக் கிளையொன்றின் மீதமர்ந்து
காகம் கரைய
வானமும் கறுப்புப் பூசிக்கொண்டது.
என்றாலும்
எனக்கு அச்சங்கள் ஏதுமிருக்கவில்லை.
என் வசமிருந்த உன் ஜாதகக் குறிப்பின்படி
அமங்கலம் நிகழுமென்றோர் அறிவிப்பு ஏதுமில்லை.
நீ நலமேயிருப்பாய் மனம் சொல்லிற்று.

ஆயினும்,
வியாழனன்று,
அவர்கள் உன்னைச் சுமந்து வந்தபோது,
எதனை யோசிப்பதென்றோ,
எதனை நம்புவதென்றோ
எனக்குப்புரியவில்லை.
ஓர் ஆழ்துயிலில் நான்
அமிழ்ந்தது போலிருந்தது.
வாழ்வுக்கும் மரணத்துக்குமிடையேயான
அனைத்தும் ஓர் மூடுபனிக்குள்ளிருப்பது போல
நான் உணர்ந்தேன்.

ஒரு சனியன்றிலன்றோ
நானும் நீயும் கிராமத்துக் கிணற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடச் சென்றோம்?
சின்னப்பையனின் உற்சாகத்தோடு
ஏளனமாய்க் கத்தும் தவளைகள் மீதில்
நீ கல்லெறிந்து விளையாடினாயே.
வாசம்மிக்க பூவொன்றிலிருந்து
தற்செயலாய்த் தவறி வீழ்ந்த
வாசம்மிக்க கள்ளைச் சுவைத்து நீ
அருந்திக்கொண்டிருந்தாயே.

பின்னோக்கிப் பார்க்கிறேன்.
இதற்குமுன் நான்
எப்போதும் கண்டிராக் காட்சிகள்
கண்முன்னே விரிந்து கிடக்கின்றன.
கூந்தலை வருடிவிட்டு
என் பின்னே நீ ஒளிந்து நின்றதையும்,
பரபரத்து நான் சுற்றித் திரிந்தபோது
கதவருகே நீ சாய்ந்தபடியிருந்து
எனையே பார்த்துக் கொண்டு நின்றதையும்
நான் நினைத்துப் பார்க்கிறேன்.

இராணுவ மரியாதைகளோடு,
பீரங்கிகள் முழக்கமிட,
ஒரு வீரமகனின் நல்லடக்கமாய் அவர்கள்
உன்னைப் புதைக்க எடுத்துச் செல்கின்றனர்.
உன் உயிரற்ற உடம்பு
கரங்களுக்குக் கரம் மாறுகின்றது.

ஒரு மூடுபனி மறைத்த
திரைக்குப் பின்னிருந்து
நான் அனைத்தையும் காண்கிறேன்.
மேகமூட்டத்திடையே நிச்சயமற்றுப் பறக்கும்
விமானத்தின் சப்தம் போல,
சில ஓசைகள் எனக்குக் கேட்கின்றன.
வாழ்வினதும், மரணத்தினதும்
அமைப்புக் குறித்து அவர்கள்
பேசிக்கொள்வதாய் நான் எண்ணுகிறேன்.

பாலைவனத்தினூடே பயணமாய்,
என் முன்னே நீண்டிருக்கும்
வெற்று மலட்டு வருஷங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துப் பார்க்கிறேன்.
எதிர் கொள்ளவிருக்கும் எனது நாட்களை
எதைக்கொண்டு நிரப்பிக் கொள்வதென்று
நான் வியந்து போகின்றேன்.

செய்வதற்கென்று எதுவுமில்லாத
என் வாரயிறுதி நாட்களில்,
என் வெண்ணிறக் கல்யாணச் சேலையை
தரைமீது விரித்து,
மணமேடையில்
இடுப்பில் வெள்ளைத்துணியணிந்து,
உனதருகே வெட்கித்தபடியே நின்றிருந்த
காதல் காலத்தை மீட்டிப் பார்க்கிறேன்.

ஓ! இந்தக் குறிசொல்வோர்
எத்தனைப் பொய்யர்கள்...?
என்னமாய்ப் பொய் சொல்கிறார்கள்...?



***Kamala Wijerathne***

இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகப்பட்டதாரி. ஆசிரியர்.பேராதனைஆங்கில ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். நான்கு கவிதைத் தொகுதிகளையும், பல சிறுகதைகளையும், பல நாடகங்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். மகரகம கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார். போர் ஏற்படுத்திய பாதிப்புகளே இவரது பெரும்பாலான கவிதைகளின் கருவாக இருந்திருக்கிறது. இது அதற்குச் சிறந்த உதாரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைச் சூரியனையும் காணாமலாக்கி...

*Amirthanjali Sivapalan.*

பல ஆண்டுகளாய் நடந்தோம்.
பல நாட்களை இழந்தோம்.
பல இரவுகளை, பல பாதைகளை
நாம் இழந்தோம்.

மென் தளிர்களுடன்
துளிர்த்துச் சிரித்திருந்த
வயல்களை,
பச்சைப் பசேலென்று
பூத்துக் குலுங்கிய
நெல் வயல்களை,
நம் நெல் வயல்களை
நாம் இழந்தோம்.

களைப்புற்றுப் போன
வயோதிகரைப்போல,
குனிந்து மண்டியிட்டுக் கெஞ்சிய
புகையிலை மரங்களை,
அந்த இலைகளின் நறுமணத்தை
நாம் இழந்தோம்.

கடற்கரைகளையிழந்து,
காலைச் சூரியனோடேயே
உழைப்பைக் கொணர்ந்து கொட்டிய
படகுகளை, வலைகளையிழந்து,
காலைச்சூரியனையும்
நாம் இழந்தே போனோம்.

எங்கள் இல்லங்களை,
எங்கள் கிணறுகளை,
எங்கள் ஆலயங்களை,
எங்கள் அகதிமுகாம்களைக் கூட,
ஏன் மழையில் நனையாவண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நம்மை பாதுகாத்த
பிளாத்திக்கு கூரைகளைக்கூட
நாம் இழந்தே போனோம்.

ஈரம்மாறா இரவொன்றில்
நம் சொந்தங்களை
காய்ச்சலில் இழந்தோம்.
நம் தேவைகளைப் பூர்த்தி செய்த
ஒரேயொரு பாலமும்
தடை செய்யப்பட்டபோது,
நாம் இறந்து போன உறவினர்களை
புதைக்க எடுத்துச்செல்லும்
உரிமையையும் இழந்தோம்.

நாம்
பல ஆண்டுகளாய் நடந்தோம்.
பல பாதைகளை இழந்தோம்.
பல ஆண்டுகளை இழந்தோம்.
பல பாதைகளில் நாம் நடந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமும், இடமும்

*Anne Ranasinghe*

அந்தக் கிராமத்து மண்ணில் மேற்கு நோக்கி
வயல்கள் வழியேயும்,பொட்டல்வெளிகள் வழியேயும்
நடந்து செல்கையில் நீங்கள்
சமுத்திரத்தைச் சந்திக்கலாம் என்று
அவர்கள் சொன்னார்கள்.
அந்தப்பயணம் நீண்டது; நிச்சயமற்றது.
சென்றடையும்வரை சொல்லும்படியான
அடையாளங்களேதுமில்லை.
உழுதலறியா வயல்வெளிகளுக்கு மேலே
முடிவின்றி நீளும் வான்பரப்போடு,
விளைச்சலுக்குதவா
மலட்டு நிலப்பரப்பு நோக்கி,
நிச்சயமற்ற நம் பயணம் ஆரம்பமாயிற்று.
அந்திசாயும் மாலைப்பொழுதொன்றில்
அந்தச்சின்னக் குடிசையைக் கண்டோம்
அத்லாந்திக் சமுத்திரத்துக்கு மேற்புறத்தே.

L. 11484

உயரத்தே, வானத்தை எதிர்நோக்கியிருந்த
செங்குத்துக் குன்றின் மீது,
வெள்ளை பூசப்பட்ட சின்னஞ்சிறு வீடு.
செந்நிற மஞ்சடைப்பு. அடிக்கடி
திறக்கப்படலுக்குப் பழக்கப்படவில்லையோ?
பூட்டு துருப்பிடித்திருக்கலாம்.
கதவைத் திறத்தல் இலகுவாயிருக்கவில்லை.
எப்படியோ திறந்தோம். வீடு இதமாயிருந்தது.
கதகதப்பான வரவேற்பு.
மெல்லிய பலகையாலான தளபாடங்கள்
புதிதன்று; ஆயினும் துலக்கமாயிருந்தன.
ஊசியிலை மரத்துக்கட்டையில் ஏற்றப்பட்ட
சுடரினதொளிவெள்ளத்தைப் பிரதிபலித்தபடி
மின்னிய பித்தளை விளக்கு.
பாரிய நான்கு தூண்களுக்கிடையே,
வாசனை வீசும் படுக்கைக்கான அவ்வறைவழியே,
சாம்பல் பூத்த மாலைப்பொழுதின்
அத்தனைச் சுகங்களையும் பரத்திச்செல்கின்ற
அத்திலாந்திக்கின் மொத்த இருளையும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரவிருக்கும் குளிர்ப் பருவகாலத்தின்
மெல்லிய தென்றல் காற்றினையும்,
மொத்தமாய்க் கொணர்ந்து கொட்டிய
ஜன்னல் கதவுகள்.

கதவை மூடினோம் நாம்.
முதல்தடவையாய் ஒருவரையொருவர்
பார்த்துக் கொண்டோம்.ஒரு ஆண்,ஒரு பெண்.
இளம்பருவம் தாண்டிப்போன இருவர்.
இந்த இடத்தை, சிலவேளை
இடமேயில்லாத இவ்விடம்,அடைதலுக்காய்
நீண்ட தூரம் பயணப்பட்டுவந்த இருவர்
தேடலின் பொருட்டு,
தம் ஜீவிதகாலத்தையே
குடித்து முடிக்கச்செய்த இடம்.
இந்தக்கால இடைவெளி சிலவேளை,
ஒரு காலமேயில்லையோ...?
காலமென்ற கணக்கெடுப்புக்கே
தகுதிகளற்ற ஜீவித காலமோ...?
ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம்.
எம் பயணம்பற்றிய சிந்தனைகள் இல்லை நம்வசம்.
அடைதல் என்பதுவும், புறப்படல் என்பதுவும்
இல்லை நமக்கு.
எதிர்காலம் பற்றிய எதிர்ப்பார்ப்புகளோ,
கடந்த காலம் பற்றிய மீட்டல்களோ மறந்துபோன
வார்த்தைகளுக்குள் அடக்கிடமுடியாத அக்கணங்கள்
எல்லாக்கணங்களின் மொத்தங்களுக்கும் சமானம்.
ஹிருதயவெளிகளில் தீச்சுவாலைக் கனன்று,
கண்களுக்கூடாகப் பிரதிபலிக்க,
நம் ஆத்மாக்களுக்குள்ளும் அச்சூட்டின் கணப்பு.
அப்படியொரு மென்மை அந்த ஸ்பரிசத்தில்.
வாழ்வுநெடுகிலும் மற்றெலா உடல்களும்
கண்டனுபவித்த தொடுதலின்போதான இன்பத்தை,
ஒரே தொடுதலினூடு நமக்குணர்த்திய
உன்னத ஸ்பரிசம்.
அனைத்தையும் மறந்தும் போனோம்.
எல்லாவற்றையும் ஞாபகிக்கவும் செய்தோம்.
மென்சுகம் வளர வளர,
வேட்கை பயங்கரமாய்ப் புரட்சியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெடித்தலுணர்ந்தோம்.
ஆழமிக்க நித்திய சுகத்துள் நமைத்தள்ளிய
வலிமிக்கதோர் சேர்க்கை.
வாழ்வையும், மரணத்தையும் நித்தியத்தன்மையோடு
ஒன்றாக்கிய அந்த வேட்கை உயர்ந்தது.
போலவே, முடிவற்றது.
தீருகின்ற தாகமல்ல அது.
எப்போதும், ஒருபோதும்
எங்கிலும், எதிலுமில்லா வேட்கையின் தாகம்
தீருதலுக்கு அப்பாலானது.
இந்த இடத்திலிருந்து.
சிலவேளை,
அது ஒரு இடமுமேகூட இல்லையோ?
இல்லை,
எல்லாமுமான ஒரு இடமோ?
இறுதியிடமோ?
திரும்பிச்செல்லல் இனி சாத்தியமில்லை.
நாமறிவோம். நமது திரும்பிச்செல்லல்
நாம் வந்த வழியிலுமன்று.
எங்கிருந்து நம் பயணம் ஆரம்பித்தோமோ
அவ்விடமுமன்று.
காலவெளியிலில்லை அது.
கடைசியிரவின் வரவுக்கும், காலத்துக்கும்
அப்பாலான தொடுதலிலும், சிந்தித்தலிலும்கூட
இல்லை அது.
ஜன்னலுக்கு வெளியே, குன்றினடியே,
உருண்டோடும் சமுத்திர அலைகளின் விடாத வீச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவற்ற இசையெனத் தவழ்கிறது.
அத்திலாந்திக் சமுத்திரவெளியில்,
வாரியிறைத்த இருளின் கூடுகையும்,
எதிர்க்ொள்ளக் காத்திருக்கும் குளிர்காலத்தின்
உயர்ந்து வீசும் தென்றலின் சேர்க்கையும்
பேரோசையோடு பாடுகின்றன.
அந்த அற்புத இரவு நெருங்குகிறது.
என்னைத் தொடு; காதல் செய்;
இடம் என்பதுவும், காலம் என்பதுவும்
நமக்குள் நாம் சுமக்கும் கனவுகள் என அறி.
என் கரங்களை அள்ளியெடு.
புறப்படலாம் நாம் இனி!!!

## *Anne Ranasinghe-*

பிறப்பால் ஒரு யூதர். இலங்கையின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவர். 2ம் உலகப் போரின்போது, ஹிட்லரின் நாசி அரசியலில் அனுபவித்த கொடுமைகள் காரணமாக இங்கிலாந்து
சென்று குடியேறியவர். ஒரு தாதியாக கடமைபுரிந்த இவர், வைத்தியரான திரு.ரணசிங்கவை மணந்தார். ஈர்க்கும் மொழியாற்றலும், அற்புதமான கற்பனைத் திறனும், கூர்மையான அவதானிப்பும் இவரை உணர்வுபூர்வமான வெற்றிகரமான கவிஞராக்கிற்று. ஆய்வாளர்கள் இவரது கவிதைகளை மூன்று வகையாக இனம் காண்கின்றனர்.

1.நாஸிச அனுபவங்களைக் கையாளும் கவிதைகள்.

2.தனிப்பட்ட உறவுகளைக்கூறும் கவிதைகள்.

3.இலங்கை புகுந்தவீடான பிறகு, அதன் மூலம் பெற்ற அனுபவங்களைக்கூறும் கவிதைகள்.

இது அவரது இரண்டாம்வகைக் கவிதைக்கு உதாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்ரல் பிரேமரத்னவுக்கு ஒரு அஞ்சலியுரை

*Suresh Canagarajah*

மாங்குளத்தருகே
ரயில் கண்ணியொன்றிலகப்பட்டு,
நீயும் உன் ராணுவச் சகாக்களும்
சீருடையில் சிதறிக்கிடந்த கோலம் கண்டு,
மனசுக்குள் மகிழ்ந்திருந்தேன்.
ஏகாதிபத்தியம் கொடூரச்சிதைவு கண்டதாய்
மனசுக்குள் ஒரு இறுமாப்பு.
உனைக்கண்டபோதன்று; உன்
சீருடை கண்டபோது.

ஆயினும்,
இன்று உனக்கான அஞ்சலியுரையை
தினசரியில் கண்டபின்னே, அன்றிரா
நீண்டநாள் வாராதிருந்த
புலிகள் நடமாடும் வடபகுதிக்காடொன்றில்
கடமைபுரிகின்ற ஒரு கணவனின்
வருகைதனை எதிர்ப்பார்த்து
பெருமூச்சோடு படுக்கையில் புரள்கின்ற
ஒரு இளம் மனைவி பற்றியும்,
தன் தந்தை கொணரப்போகும்
இனிப்பு மிட்டாய்க்காய்
காத்துக்காத்து கனவு கண்டு கொண்டிருக்கும்
ஒரு சின்னப்பாலகன் பற்றியும்
என்னால் உணரமுடிந்தது.
சீருடையின் பின்னணியிலிருந்தவோர் கணவனை,
நம் சுலோகங்களின்
பின்னணியிலிருந்தவோர்த் தந்தையை
என்மனக்கண்ணில் அப்போதுதான் கண்டேன்.

ஆயினும் நான் ஒன்றும்
உணர்ச்சி வயப்பட்ட முட்டாளல்ல.
நானறிவேன்!
திடீரென நீ எழ நேர்ந்தால்,
எனை உன் முன் காண நேர்ந்தால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னால் எனக்குள்ளிருக்கும் ஒரு மகனை,
ஒரு சகோதரனை,
உனக்கான சில கவி வரிகள் புனையும்
ஒரு கவிஞனை
உணரமுடியாது போகும் என்பதை,
நான் நன்கறிவேன்.
என்னில் நீ கொடூரத்தனமான உன் எதிரியை,
'தமிழ் நாயை', பயங்கரவாதியை
மட்டுமே காண்பாய்.
வெறுப்புமிழும் கண்களோடு எனைநோக்கி
உன் துப்பாக்கிகள் நீளக்கூடும்.
என் உயிருக்காய் நான் கதறியழ,
நீ என்மீது உன் பலாத்காரத்தை
பிரயோகிக்கப் புறப்படலாம்.
மிகைப்படுத்தப்பட்ட மதபோதனைகளாலும்,
ஒருபக்கச்சார்பான தினசரிசெய்திகளாலும்,
பிழையாகவே முத்திரைகுத்தப்பட்ட
பள்ளிப்போதனைகளாலும்
நிஜத்தையறியாமலேயே வாழ நேர்ந்துவிட்ட
என்மீதான உன் வெறுப்பு
உன் கண்களிரண்டிலும் மின்னக்கூடும்.

எனை அதிஷ்டவசமாக உன்னால்
பிடிக்க நேர்ந்தால், அல்லது
துரதிஷ்டவசமாக நானே உன்
காலடியில் விழநேர்ந்தால்,
உன் சப்பாத்துக் கால்களினடியில் நான்
உனக்கு விருப்பமான 'கொத்துரொட்டி'யைப் போல
சின்னாபின்னப்பட்டுப் போக நேரலாம்;
உன் கத்தியின் கூர்முனையில்,
உன் துப்பாக்கியின் ரவைகளில்
உன் உயிர் ஊசலாட நேரிடலாம்;
என் தொலைக்காட்சிப்பெட்டியும்,
இதரபிற பொருட்களும்,அனைத்துடைமைகளும்
உன்னால் துண்டு துண்டாக்கப்படலாம்.
என்னில்லம் உன்னால் மூட்டப்படும் தீயில்
சாம்பலாகிப்போகலாம்;
இன்னும் கொஞ்சநேரம் மீதமிருந்தால்,
என் சின்னமகனின் கண்ணெதிரிலேயே,
என் மனைவி உன்னால் கற்பழிக்கப்படலாம்;
அஞ்சலிபாடக்கூட யாருமின்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்கப்படாத நாறும் சடலமாய்,
தினசரி குவிக்கப்படும் மனித முண்டங்களில்
ஒன்றென நான் இருக்க நேரலாம்.

ப்ரேம்! எப்போது
நாம் நிஜமுணரப் போகின்றோம்?
எப்போது நாமிந்த நீள்துயிலினின்று
விழித்தெழப்போகின்றோம்?
திரைப்பின்னணியில் அமர்ந்து
சதிகள் செய்யும் இந்நரித்தன வேந்தர்தம்
உண்மை முகங்களை எப்போது அறியப்போகின்றோம்?
மேற்குலகப் பார்வையாளர்களின் கவனத்திற்கெனத்
திரையிடப்படும் இத்துயரக் கேலிக்கூத்தை நிறுத்தி,
இவர்களது தலைவிதியை நிர்ணயிக்க நாம்
என்று எழப்போகின்றோம்? அன்றே,
நாம் யாரென நமக்கே தெரிய நேரலாம்.
கூடவே,
ஒரு புதிய யுகத்தின் வருகைக்காய்
நாம் நடமிடலாம்!!!

## *Suresh Canagaraja*

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப்பிரிவின் தலைவராகக் கடமை புரிந்தவர்.
அமெரிக்காவில் தன் பட்டப்படிப்பை முடித்தவர்.
இலங்கையை சின்னாபின்னப்படுத்திய இனக்கலவரத்தை தன் கவிதைகளில் இவர்
எப்போதும் சாடி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள்

*Jean Arasanayagam*



நீ எங்கே உட்கார ஆணையிட்டாயோ,
அங்கே அவர்கள் உட்கார்கிறார்கள்.
சுவர்களில் சாய்ந்துட்கார்ந்த மாதிரியே,
அவர்கள் உறங்குகிறார்கள்.
அவர்கள் பாய்களில் சுருண்டுறங்குகிறார்கள்.
சிலர் முணுமுணுத்தபடி, சிலர் சாபமிட்டபடி,
சிலரோ மௌனத்துள் உறைந்துபோய்....!
பிறப்புக்கண்டு நான்கு நாட்களேயானவோர்
கைக்குழந்தை தாயோடொட்டிப் படுக்கிறது.
தந்தை....? யாரறிவார்.......?
இறந்திருக்கக் கூடும் அல்லது,
தொலைந்திருக்கக் கூடும்.
யாருக்கு அதுபற்றிக் கவலை..? கரிசனை..?
தாய் பிரசவத்தின் பின்னான வலியில் உழல்கிறாள்.
சின்னஞ்சிறு பாலகனொருவன் தரைமீதில்.
காய்ச்சலில் வதங்குகிறான்.
வாகனங்கள் வருகின்றன. அவை
கட்டுக்கட்டுகளாய் மனிதர்களை ஏற்றிவந்து,
இங்கே கொட்டிவிட்டுப் போகின்றன.
வயதான ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும்
வரிசைவரிசையாக தம் தட்டுகளோடு
படிகளில் காத்திருக்கிறார்கள்
சோற்றுக்கும், சாம்பாருக்குமாய்!!
இரத்தம் வழிந்தோடும் தன் தலையின் காயத்திற்கு,
ப்ளாஸ்டரைப் போட்டு மூடிய ஒரு மனிதன்
உறக்கமின்றி இரவிரவாய்த் துடிக்கிறான்.
ஜனக்கூட்டம் நிரம்பி வழியும் வாசலிலே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவின்றி இங்குமங்கும் நடக்கின்றான்.
மத்தியிலே, கிழிந்துபோன வெள்ளைச்சாரியோடு
ஒரு பெண் நிற்கிறாள்.
தோடுகளற்ற வெற்றுக் காதுகள்.
அசைவுகளில்லை அவளிடத்தே...
தாலியில்லை அவள் கழுத்தில்.
அவளைச் சுற்றி யாரெல்லாம் இருக்கிறார்கள்?
தெரியாது. அவள் அறியும் நிலையிலில்லை.
மௌன மேகங்கள் நகர்கின்றன.
சுருளும் பாம்புகள் தன் நச்சுப்பைகளை
காலிசெய்தபடியிருக்கின்றன.
நாம் ஒருவரை ஒருவர் எதிர்நோக்கியிருக்கிறோம்.
'சாப்பிட்டாயிற்றா?' நான் கேட்கிறேன்.
அவளிடமிருந்து பதிலில்லை.
ஒரு இளம்பெண்வந்து
அவளைக் கூட்டிச் செல்கிறாள்.
எந்தத் திசையில் செல்ல வேண்டும்?
அவளுக்குத் தெரியாது...
எந்தத்திசையில் சென்றால்
அவள் தன் பாதுகாப்புக்கு உத்திரவாதம்?
அவளுக்குத் தெரியவே தெரியாது.
வெளியே,
நகரம் எரிந்து கொண்டிருக்கிறது.
கொள்ளைக்காரர்களால்
வீதிகள் நிரப்பப்பட்டுக் கிடக்கின்றன.
புதிய நெருப்பு மூட்டப்பட்டாயிற்று,
பழைய நெருப்பு அணையுமுன்னே..!!!



## *Jean Arasanayagam*

இலங்கையைச் சேர்ந்த படைப்பாளி.Burgher இனத்தைச் சேர்ந்தவர். திருமணத்தின்பின் இந்துவாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். பேராதனை ஆங்கில ஆசிரியப்பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர். இந்தியாவின் Jayadewa, மற்றும் Wijayapathy Naidu போன்றோரின் சாயலைப்பின்பற்றிக் கவிதைகள் எழுதுகிறார். தன் கவிதைகள் ஊடாக,இலங்கையில் வெகுகாலமாய் நிலவிவரும் இனப்பிரச்சினையையும். சமூக அரசியல் முரண்பாடுகளையும் சாடும் இவர்,1983 கறுப்பு ஜூலையில் அகதியாகி, ஒரு அகதிமுகாமில் ஜீவிக்க நேர்ந்தபோது எழுதியது இக்கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்வர்கள் வந்து!!

*Prianthi Wicramasuriya*

சூர்யமுகம் தாண்டி
கள்வர்கள் வந்தனர்; வந்து,
திருடிய சூர்யவெளிச்சத்தில்
கொஞ்சத்தை நிலவுமீதில் தெளித்தனர்; இன்னும்
கொஞ்சத்தை வானம்மீது தெளித்தனர்;
நிலவையும், நட்சத்திரங்களையும்
கூர்ந்து பார்த்தபடியே இரவெலாம்
நானும், நீயும் இங்கே கிடந்தோம்.
நானும், நீயும் மட்டுமே!
பின், கடவுளின் சொந்தத் தோட்டத்தினுள்ளே
கள்வர்கள் நுழைந்தனர்; நுழைந்து,
தேவதைகளின்
குரல்களைத் திருடினர்.
திருடியதில் பாதியை பறவைகளின்
தொண்டைகளுக்குள்ளும், மீதியை என் நேஸத்தின்
தொண்டைக்குள்ளும் வைத்துப்போயினர். ஆதலால்,
அவைகள் பாடின; நீயும் பாடினாய்.
மாலைப்பொழுதுகள்
அப்பாடல்களால் நிரம்பி வழிந்தன.
என் மனசெல்லாம் மகிழ்ச்சி
நிரம்பிக் கிடந்தது.
கள்வர்கள் வந்தனர்; வந்து,
எனக்குச் சொந்தமான
என் இதயத்துள் எட்டிப்பார்த்தனர்.
காதல் அங்கு நிரம்பி வழிவதும்,
என் அருகாமைக்காய் ஏங்குவதும் கண்டனர்.
தன்னந்தனிமையில் தகித்த
உன் இதயப்பாத்திரத்தையேந்தி
அவர்கள் இங்கே வந்தனர்; வந்து, என்னிதயத்துள்ளதை
அப்படியே ஊற்றிப் போயினர்.
ஆதலினால், உனை நான்
நேஸிக்கிறேன்.
நேஸித்தபடியிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஒற்றையடிப்பாதையில் வெள்ளைக்கொடி பறப்பது கண்டு!..

***Kamala Wijeratne***

மழை நனைத்துக் கிழிந்துபோன
அந்த வெள்ளைக்கொடி மட்டும்,
உன் வருகையைச் சொல்கிறது.
திறக்கப்படமுடியாதபடி
முத்திரையிடப்பட்ட சவப்பெட்டி
உன் எல்லா அடையாளங்களையும்
மூடிவைத்து விட்டது. கூடவே,
நீ எங்ஙனம் இறந்திருப்பாயென்கிற
ஊகிப்பையும் அது தடுத்துவிட்டது.
உனதன்னை
அதிர்ச்சியுற்று விறைத்துப்போய்,
மழுங்கிய வேதனையுடன் முனங்குகிறாள்.
எதிர்கொள்ளவிருக்கும் வருஷங்கள்,
முடமாகிப்போனதெண்ணி,
ஒளி மங்கும் மெழுகுவர்த்தியினருகே,
உன் தங்கை கூனிக்குறுகுகிறாள்.
அரசர்க்காகவும், அன்னைபூமிக்காகவும்
சமர்செய்த உனக்கென்று
இங்கே இன்று யாரிருக்கிறார்?
உனக்கான
பாராட்டுக்கள், புகழ்மாலைகள் எங்கே?
மலர்ச்செண்டுகள், பதாதைகள் எங்கே?
கொசுமட்டும் உன் புகழ்பாடி,
ஏதோ பிரலாபிக்கிறது.
போராட்டத்தில் சிக்குண்ட உன் சகாக்கள்
தத்தம் கடமையைச் செய்கிறார்கள்.
எப்படியோ அவர்கள்தான்,
நமக்குக் காட்டப்படாமலேயே
நீ புதைக்கப்படுவதைத் தடுத்து,
உனை இங்கே
கொணர்ந்து தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம் வெறுமனே வந்து,
உனக்கு இறுதிமரியாதை
செய்து விட்டுப் போகின்றது.
உனதண்டை வீடு
கிரிக்கெட் வெற்றிகளைச் சொல்லி,
கூக்குரலிடுகிறது.
சுற்றிவர அமர்ந்து அவர்கள்
'கொகா-கோலா' குடிக்கிறார்கள்.
தொலைக்காட்சிப்பெட்டியின் திரை,
அவர்களை வசியப்படுத்தி வைத்திருக்கிறது.
உன் பின்புற வீட்டிலிருந்து,
பெருத்த இசையோடு
பாடல்கள் ஒலிக்கின்றன.
வெடி முழக்கம் கேட்கிறது.
அண்டைவீட்டிலின்று ஏதோ நிச்சயதார்த்தமாம். வரவேற்போ,
'இன்டர்கொன்டினென்டல்' ஹோட்டலிலாம்.

மெல்லிய இசை ஒலிக்கிறது.
மெழுகுவர்த்தி நிச்சயமற்று
அங்குமிங்கும் அசைகின்றது.
வெளிச்சம் நிழலுக்குள் அமிழ்கிறது.
மக்கள் வெறுமனே வந்து உன்
சவப்பெட்டியைப் பார்த்துவிட்டுப் போகிறார்கள்.
சூரியன் மறைவதற்கிடையில்,
அவர்கள் உன்னைப்
புதைத்துவிட்டுத் திரும்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதி

*Jean Arasanayagam*

ஒரு சிறைக்கூட்டுக்குள்
அவன் இறந்து கிடக்கிறான்.
அது எப்போது நடந்திருக்கும்?
நாம் தூக்கத்திலிருந்தபோதோ?

வைகறை வேளையில்
நடந்திருக்க வேண்டும்.
அவனது மௌனக் கதறலையோ,
எரிச்சலூட்டும் முனகலையோ
நாம் கேட்கவில்லை.
அவன் தனியே, தன்னந்தனியே
இறந்து போயிருக்கிறான்.
யார் துக்கம் கொண்டாடியது?
தனியொரு மனிதனா?
இல்லை, ஒரு தேசமா?

ஒரு சிறைக்கூட்டுக்குள்
அவன் இறந்து கிடக்கிறான்.
அவனது மூச்சு
சிறைக்கம்பிகள் ஊடாக,
சுழன்று வட்டமடித்திருக்கக் கூடும்.
மக்கள்திரள் வெளியேயிருந்த போதிலும்,
அவனருகே ஒருவர்கூட இல்லை.
மறுநாள் காலைத்தினசரி
அவனது இறப்புச்சேதியை சுமந்துவந்தது.
சிலவேளை, அவன் இறக்கையில்,
அவனைக்கடந்து நீ போயிருக்கக்கூடும்.
கூரையும், நான்கு சுவர்களுமான
பூட்டப்பட்ட சிறைக்கூடத்தினுள்,
தனியே, தன்னந்தனியே
அவன் இறந்திருக்கக்கூடும்.
சிலவேளை,
நீயும் அங்கே இருந்திருக்கலாம்.
நீ கெட்டிக்காரன். எதையும் தெரியாதமாதிரி,
நீ முகமூடியணிந்துள்ளாய்.
பாதுகாப்பு கருதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் சிந்தனைகள் எதையும்
வாய் திறந்து சொல்லாமலிருக்கிறாய்.
உன் விலாயெலும்புகளுக்கூடாகப் பாய்ந்து,
நுரையீரலைச் சுழற்றி வீசுகின்ற
துப்பாக்கி ரவைகள் குறித்து,
நீ அச்சம் கொண்டுள்ளாய்.
விடு. மற்றவர் தம் குருதியைச் சிந்தட்டும்.
அவர்தம் உடல்களெங்கும்
ரணக்காயங்கள் விளையாடட்டும்.
உன் உதடுகளை
உண்மை வெளிப்படாவண்ணம்
இறுக மூடிக்கொள்.
துப்பாக்கிகளும், குண்டுகளும்
சுழன்று செயற்படட்டும்.
காட்டுக்குள்ளிருந்து வீதிக்கு நீ
காலடியெடுத்து வைத்தால்,
குருதியின் தடாகத்தில் நீ
விழுந்து கிடப்பாய்.
பார் தூக்கிலிடுவோனின்
சுருக்குக்கயிறு இறங்குவதை.
மெதுவாக
உன் கழுத்தைச்சுற்றியிறுகுவதை.
முறிகிறது எலும்பு.
அது வருவதைக் கவனி.
நெருங்கிவந்து ஆடுவதைக் கவனி.
அந்த முகம் அடையாளம் தெரிகிறதா?
அடையாளந்தெரிந்து
உன்னால் அலற முடிகிறதா?
அவன் உன்னில் ஒருவன்.
அவன் நண்பனும் நீ பகைவனுமா?

சிறைக்கூடம் ஒன்றில், Steve Biko வும், அவரது சகாக்களும்
இறந்து கிடந்ததைக்கண்டு, Jean Arasanayagam
இக்கவிதையை எழுதினாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவின் பின்னே!

*Abu Salma*

என்னை எதுவும் கேளாதே.
உனக்கு பதில்சொல்லும் சக்தி எனக்கில்லை.
என் அன்னை பூமிக்காய்,
என் அன்பானவர்க்காய்
நான் எந்தளவு
அழுது புலம்புகிறேன்
என்பதைச்சொல்ல
எனக்குச் சக்தியில்லை.
ஆதலினால்,
என்னை எதுவும் கேளாதே!
தொலைவில் நின்றபடி,
பலஸ்தீனமே!
உன் ஒளியை
ஒவ்வொரு முறையும்
என்னால் உணரமுடிகிறது.
இதயம் நொறுங்கி,
ஆன்மா உருகுகின்றது.
தரையைத் தொட்டுத்தொட்டுச்செல்லும்
கடலலைகளைப்போல,
நாம் உன்னை
விட்டு விட்டு வந்தோம்.
முகில் கூட்டங்களெனச் சிதறி
சின்னாபின்னமாகிப்போனோம்.
உன்னை நேஸித்தமையால்,
உனக்காய் தாகித்துக்கிடந்தமையால்,
அழுகைக்கென்றும்,உயிர்வதைக்கென்றும்
பிறப்பெடுத்தவர்களென்றானோம் நாம்!
நாம் யாருக்குச்சொந்தமென்று
நீ கேட்டால்,
'உனக்கு மட்டுமே'என்பதைவிட
வேறு பதில் என்வசமில்லை.
உன்னைப்பிரிதலே,
உன் மண்ணோடு நம்மை
இன்னும் நெருக்கமாக்குகின்றது.
நம் பூமியின் ஒவ்வொரு பகுதியிலும்
உனக்கான நம் விருப்பங்களையே
நாம் விதைத்து வைத்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்களென,அம்புகளென அவை
முளைக்கும்!!!
நம் கர்வத்தின்மீது கறைபூசி
நம்மை சிதறடித்தாலும்,
உன்னைவிட்டு நாம் பிரிந்தேபோனாலும்
நீ நம் நெஞ்சங்களில் வாழ்கிறாய்
ஆண்டாண்டுகளாய், தசாப்தங்களாய்!!
வயதில் சிலர் இளமையாய்,
சிலர் நரைமூப்பாய்ப் போனாலும்,
உன் மைதானங்களில்
நாம் மீண்டும் சந்திப்போம்.
முழந்தாளிட்டு நாம் முத்தமிடுகிறோம்,
உன் மலைகளை!
உன் மண்ணை!!
உன் கூழாங்கற்களை!!!

## அபூ ஸல்மா-

பலஸ்தீனக்கவி. 1980இல், தன் 75ம் வயதில் இறையடியெய்தியவர். பலஸ்தீனப்போராட்டத்தில், தன் உயர் கவிதா இலக்கியத்தின் மூலம், போராட்டவீரர்களுக்கு உறுதுணையாக நின்றவர்.இந்த நூற்றாண்டின் பலஸ்தீனத்தின் மிகச்சிறந்த தேசாபிமானி எனப்போற்றப்படுபவர். 1979ல், பிரபல்யம் வாய்ந்த Lotus விருதினைப்பெற்ற இவர், இறக்கும் போது பலஸ்தீன எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் யூனியனின் தலைவராக இருந்தார். தலைவர்களின் புகழை என்றுமே பாடாத இவர், பலஸ்தீ னப்போராட்டத்தில் பங்கு பற்றுகின்ற போராட் டவீரர்களுக்காக மட்டுமே பாடியதில், மக்கள் கவியென உன்னத அளவில் போற்றப்படு கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்துக்குத் திரும்பியபடி!

*May Sayegh*

அபாயத்தின் பள்ளத்தாக்குகளைக் கடந்து,
இரவின் கருநிழலில் நடந்து,
அறியவரப்படாத அபாயங்களை எதிர்த்து,
உன் வண்ண ரோஜாக்களின் வாசனை
எனை வழிநடத்த,
உன்னிடம் நான் வந்தேன்.
ஏக்கம் மிகுந்த வருஷங்கள்
உன் அழைப்பிற்கு பதிலளிக்க,
தாக்குதலுக்காளாகிய உனைப்பார்க்க
நான் வந்தேன்.
விஷப்பற்களும், கொடூர நகங்களும் கொண்ட
பலாத்காரங்களும், கற்பழிப்புகளும் மட்டுமேயறிந்த
உன் சியோனிஸவாதிகளுக்கு,
அவர்தம் கிரனைற்றுக் கற்சுவர்களுக்கு,
கண்ணிவெடிகள் நிரம்பிய வயல்வெளிகளுக்கு,
நான் சவால் விடுக்கிறேன்.
யுத்தத்தின் இடிபாடுகளில் சிதைவுற்ற
என் நிலத்தை அள்ளியணைத்திட,
என் பலஸ்தீன மண்ணின்
என் மக்களைச் சந்திக்க,
மீண்டும் இணையுமோர் பொற்கனவில் உந்தப்பட்டு
நெருங்கிவரும் தேஜோமயப் புலர்வின்
நற்சேதிகள் சுமந்து,
உன்னிடம் நான் வந்தேன்...!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடிமகன் திரும்பி வருகிறான்.

*Kanzul Wahab*

எனக்குச் சொல்,
பிறந்த மண்ணை விட்டுச் செல்லுமாறு
நீ ஒருவனைக் கேட்க முடியுமா சொல்.
அங்கேயே இறக்கவும்,
அந்த மண்ணின் மடியில் புதைக்கப்படலையும்
விரும்புமொருவனை,
அவன்தன் பிறந்த மண்ணைவிட்டுச்
செல்லென்று நீ கேட்க முடியுமா?
அகதியென்று அழைக்கப்படுவதை நீ விரும்புவாயா?
ஓ! எனக்குச் சொல்,
ஏன் உன்னால் உணர முடியவில்லை?

தன் சொந்த மண்ணுக்காய்
அலறித்துடிக்கும் அவனது அழுகையை
மகிழ்வோடு பார்த்து ரசித்தபடி
அழகாய்ச் சாய்ந்தமர்ந்து கொண்டிருக்கிறாய்.
இம்மண்ணை உனதென்கிறாய் நீ.
உன் சொந்த வீட்டை எவனும்
அழித்துப்போவதை அனுமதிப்பாயா நீ?
நாடுகள்தோறும் அலைந்து
தஞ்சம் கோரும் அகதியென
அழைக்கப்படுவதை விரும்புவாயா நீ?

நண்பனே! ஏன் அன்பின் கண் கொண்டு
பார்க்க மறுக்கிறாய் நீ? திருந்த
இன்னும் தாமதமாகவில்லை, ஞாபகம் கொள்.
மற்றோருக்கு நீயிழைத்த கொடுமைகள்
உனக்கே இழைக்கப்படுகையில்,
நீ உணரலாம் என்னை. நினைவில் கொள்!

தன் தேசத்தையும், அதன் மக்களையும்
தன் மனசின் கண்வழியே பார்த்துக்கொண்டிருக்கும்
இம்மண்ணின் மைந்தன் தன் கண்களை நீ
குருடாக்கி விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவன் தன் பலமும், வீரமும் அவனை வழிநடத்த,
ஒளி பயணிக்கும் வேகத்தில்
ஓர் அழகிய வைகறையில்
அவன் தன் மண்ணை வந்தடைவான். அன்று,
நீ உணரக் கூடும்
பலஸ்தீனத்தின் நிஜமான குடிமகன்
திரும்பி வருகிறான் என்று......!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்தின் அழுகை

*Kanzul Wahab*

என் பெயர்- என் உரிமைப்பெயர்
எனக்கு வேண்டும்.
அதனை நீ அழித்து விடாதே.
அ∴து இல்லையெனில், நான்
முடம் என்றறிக நீ.
எனதழுகை உனக்கு கேட்கவில்லையா?
ஆயின், என் கதறல் வீணா?
ஓ! என் காயங்களையாற்றி
இந்த வதைக்கும் வலியிலிருந்து
எனை மீட்டெடுத்து ஆற்றுப்படுத்து.
அருகிருக்கிறாயோ, இல்லை
தொலைவிலிருக்கிறாயோ
பலஸ்தீனனே! விரைந்து வருக.
ஈவிரக்கமற்ற சியோனிஸ ஈட்டி
எனைக் குத்திக் குதறுமுன்னர்
இங்கு வந்தெனைக் காத்திடுக.

அவர்தம் பேய்ப் பசிக்காய்
அவர்கள் திருடினர்
உனதான அனைத்தையும்.
விரைந்தெழு என் குழந்தாய்!
எனக்கே சொந்தமான
என் குருதி நீரில்,
எனை அவர்கள் நனைத்தனர்.
சண்டையிடு உன் நியாயத்துக்காய்.
ஹிருதயம் இடிய
மௌனத்துள் உறைந்து,
நான் ஊமையாகிக் கிடக்கிறேன்.
எனினும், எனக்காக நீ
வெற்றி கொள்வாய் எனவும்,
நீடித்திருக்கும் இப்பயங்கர இருட்டிலிருந்து
எனைக் காப்பாய் எனவும்,
விடுதலையின் பிரகாசத்தினது மிகையால்,
நம்பிக்கையிலும் எதிர்ப்பார்ப்பிலும்
என் நெஞ்சுக்கூடு நிரம்பிக்கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலம், இந்த வயல்வெளிகள்,
இந்த மலர்கள், இந்த மரங்கள்
அனைத்தையும் அவர்கள்
என்னிடம் கேட்கிறார்கள்.
ஓ! தாயே, என் பலஸ்தீனமே!
சியோனிசக் கூக்குரல்கள் மட்டுமே
நம் காதுகளில் விழுகையில்,
மகிழ்ச்சி என்பதை நாம்
அனுபவித்தல் எங்ஙனம்?

என் நாவுக்கு முடிச்சு போடப்பட்டுள்ளது.
என்னால் விடையிறுக்க முடியவில்லை.
நான் மௌனத்துள் உறைந்து கிடக்கிறேன்.
எனினும் உள்ளத்தையள்ளும்
ஓர் முணுமுணுப்போடு
நம்பிக்கையின் குரல் அதோ கேட்கிறது.
பொறுமையோடிரு பலஸ்தீனமே!
அதோ உன் எதிர்காலம் தெரிகிறது.
உன்னை மூடியிருக்கும் இருள்மூட்டம்
இனி விலகும்! விடுதலையின் வெளிச்சம்
தொலைதூரத் தொடுவானில் தோன்றியெழுதலை
உன்னால் காண முடியவில்லையா?

எந்தன் பரிதாபத்துக்குரிய வழக்கை
நான் உலகின் முன் வைக்கிறேன்.
முகமூடியகற்றி சியோனிஸத்தின்
உண்மை முகம் காண்.
உலகத்தைக் கூவியழைத்து நான் சொல்வேன்,
நானே பலஸ்தீனத்தின் குடிமகன்.
ஆக்ரமிப்பாளர்கள் என் சோதரனையழிக்க
நான் அனுமதியளியேன்.
அந்த நாள் நெருங்கி வருகிறது. அன்று
எனை அவர்கள் 'பலஸ்தீனன்' எனும்
பொற்பெயரால் அழைக்கத் தலைப்படுவர்
அறிக நீ!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்துக்குக் காதலுடன்!

***Kanzul Wahab***

உன்னை நேஸிக்கிறேன் பலஸ்தீனமே!
என் முடிவற்ற அன்புள்ளமே!
என் உணர்வுகளின் ஆழம் சொல்ல
எங்கிருந்து ஆரம்பிப்பதென்று
எனக்குத்தெரியவில்லை என் அன்பே.
செயல்கள் நிரூபிக்கப் போதாது போகலாம்.
சொற்களும்கூட பிரயோசனமற்றுப் போகலாம்.
நீயே என் நேஸம் எனவும்,
எனதன்பை நீ
என்றும் இழக்கப்போவதில்லையெனவும்
நான் நிச்சயமாய்ச் சொல்வேன் பலஸ்தீனமே!

கண்ணீர் சிந்தாதே.
உனை நான் கைவிடுவதில்லை.
சந்தேகம் கொள்ளாதே.
உனைத்தவிர எனக்கு நேஸமில்லை.
பலஸ்தீனமே ஞாபகம் கொள்.
என் ஹிருதயம் என்றும்
தவறின் பாதையில் போகாது.
உன் திவ்விய உரிமையைப் பாதுகாக்க
இறையோனை இறைஞ்சியபடியிருக்கிறேன்.
ஒருவரிலிருந்து மற்றவரைப்பிரித்து
அவர்கள் சதி செய்யலாம். எனினும்
பயம் வேண்டாம் பலஸ்தீனமே!
இறைவலிமையால் நாமிணைவோம்.

காதலின் அழகிய புறாக்களை
என்னால் உனக்குத் தூதனுப்ப முடியவில்லை.
உன்மீதான காதலை நான் நிரூபிக்க
எனக்கு அவகாசம் தா எனதன்பே!
நாமிணையும் நன்னாளின் தேஜோமயப் புலர்வு
மிக அருகில். ஆதலினால்
என் வருகைதனை எதிர்ப்பார்த்திரு
பலஸ்தீனமே என் அன்பே!!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்திலிருந்து ஒரு கவிதை

***Mu'in Basisso***

சுதந்திரத்துக்கான சண்டையில்
பங்குபற்றும் என் ப்ரிய நண்பர்களே!
ஒரு தியாகியாய் மண்ணின் மடியில்
நான் சரிந்து விழநேர்கிற போது,
என் இடத்தை நீங்கள் நிரப்புங்கள்.
என் குருதி தோய்ந்த கரங்களை
அச்சமின்றி ஏந்திக் கொள்ளுங்கள்.
நான் ஒன்றும் இறந்து போகவில்லை.
உங்களை அழைத்துக்கொண்டேயிருப்பேன்.

சுதந்திரத்தின் எதிராளிகளே!
உங்கள் விலங்குகளுக்கு நான்
ஒன்றும் அஞ்சவில்லை.அவை
என் கால்களைக் கட்டிப்போடட்டும்.
கவலைகள் கிடையாது. சாரிசாரியாய் வரும்
என் மக்களினால் ஏற்றிவைக்கப்பட்ட
விடுதலையின் சுவாலைதனை நீங்கள்
ஒன்றும் ஊதியணைத்திட முடியாது.


இவ்விரவின் மூடுபனியை அழித்தொழிக்க,
விரைவாய் ஒரு வெளிச்சம் மிக்க
காலைப்பொழுது வரும். நம்
சிறுபராயத்தினதும், இளம்பராயத்தினதும்
புராதன தாய்வீட்டை
அதன் பிரகாசம்மிக்க ஒளி
வெள்ளமென வந்து நிரப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டனில் ஒரு பலஸ்தீனியன்

*Ahmed Yassin*



"ஹலோ! இலண்டனுக்கு வருகிறீர்;
உமது வரவு நல்வரவாகுக!"அவன் சொன்னான்.
பாலஸ்தீனியனா நீர்? துவேசமானதோர்
நமுட்டுச் சிரிப்புடன் எனை வியப்பொடு
கூர்ந்து அவதானித்து, அவன் கேட்டான்.
".....ஆமாம்!நான் பாலஸ்தீனியன்."
வியப்போடெனை நோக்கிய அவனுக்கு
நான் விடைபகர்ந்தேன்.
"நான் ஹை∴பாவில் பிறந்தவன்.
வித்தியாசமாய்த் தெரிகிறேனா?
எஞ்சியிருக்கும் ஓர் பாலஸ்தீனியன்.
தண்டனைகளுக்கெலாம் பயப்படாது,
குற்றங்களுக்குமேல் குற்றங்கள்
பலபுரிந்த உன்னால் என் நாடு
திருடப்பட்டும்,அநியாயமாய்
அபகரிக்கப்பட்டுமிருக்கலாம். ஒருபோதும்
எனது அடையாளம் மாறப்போவதில்லை.
நீயே முதல் குற்றவாளி.
வெளிநாட்டுத் திருடர்களுக்கு
என் தாய்மண்ணைக்கொடுத்து,
எனை நாடற்றவன் ஆக்கிய நீயே
என் முதல் குற்றவாளி.
உன் மண்ணின் யூதன்
ஒருபோதும் வருந்துவதில்லை;
புரிந்த குற்றங்களுக்காய் துயருருவதுமில்லை."
நான் சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்தின் போராளிகள்

*Yousef Al-Khathib*

இன்றிரா,
அராபிய வீரத்தியாகிகளின்
புனித குருதியிலிருந்து
'ஜோர்தான்' பூத்துக்குலுங்கும்;
'ஜெரிக்கோ'வின் குழந்தைகள்
அதே குருதியில் ஞானஸ்நானம்
செய்விக்கப்படுவர்;
'ஜர்மா' கனிகளாலும்,
திராட்சைரசத்தினாலும் ஒளிர்ந்து மின்னும்;
பலஸ்தீனத்தின் மலைகளையும்,
பள்ளத்தாக்குகளையும் ஒளியேற்றிவைத்து,
'ஸபாத்'தின் ஒலிவ் மரங்கள் பளீரிடும்;
காதலினதும், வெற்றியினதும் இன்னிசை
நம் பேராவல்மிக்க மண்ணை நிரப்ப,
இடியையும், மின்னலையும் ஊடறுத்து,
பலஸ்தீனத்தின் போராளிகளென
ஒரு புதுத்தலைமுறை பிறப்புக் காணும்
இன்றிரா.



பலஸ்தீனத் தாய்க்குலமே!
வீரத்தை உற்பத்தியாக்கும் கொடிகளே!
ஆயிரமாயிரம் போராளிகளை
இந்த மண்ணுக்கென வழங்குங்களேன்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைத்தளபதிகள் பேசுகிறார்கள்

*Kanzul Wahab*

நடந்தவற்றையெலாம் மறந்துவிடுமாறு
நீ கேட்கிறாய் -அதெப்படி முடியும் சொல்?
Deir-Yassin தன் படுகொலையை
மறக்கவே முடியாதபடி என் நினைவுகள்
தெளிவாய் இருக்கின்றன.
கருணையே நீ எழுந்து வருக! உன்னை
கிஞ்சித்தும் மறைக்காமல் நீ வெளிப்பட்டு வருக!
கணக்கிலெடுக்காது விடவும்,
சடுதியாய் மறந்து போகவும், இதென்ன
சிறுபிள்ளை விளையாட்டா சொல்!

நம் நிலத்தின் வளங்களை அவர்கள்
கொள்ளையிடுகின்றனர். அவர்தம்
தேசியநலனுக்கு இடையூறு விளைவிக்கிறோம்
எனும் சாக்கில் நமை அவர்கள் பயங்கரவாதியென்கின்றனர்.
அமைதியாய் வாழவும், ஐக்கியத்தில் மகிழவும்,
கனவு காண்கிறோம் நாம்.
இன்றும், நாளையும் இதே கனவு காணவே
நாம் காதல் கொள்கிறோம்.
சியோனிஸத்தின் கொடூரப்பிடியிலிருந்து,
பலஸ்தீனத்தைக் காத்திடவே
நாம் சமர் செய்தவண்ணமுளோம்.
இ∴தெப்படி பயங்கரவாதமாகும் நீயே சொல்?
இது பயங்கரவாதமெனில்,
பயங்கரவாதியாய் இருப்பதில் நாம்
பெருமிதம் கொள்கிறோம்.
சுதந்திரத்தை நேசிப்போரே! நம்மோடு
நீர் உடன்படுகிறீரா? சொல்க!

பலஸ்தீனமே! நீ நமதுரிமை. உனை மட்டுமே
நாம் கோருகிறோம். பதில் சொல்.
நாம் உனைக்கூவியழைப்பது கேட்கிறதா?
பொறுமையோடிரு! உனை மீட்கவே
நாம் போராடுகிறோம்.
நமதான வைகறை புலருகையில்,
உனதருமை முகத்தருகே நாமிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓ! உன் கதறலை நாம் கேட்கிறோம்.
அவர்தம் கொடூர முள்ளிலிருந்து,
உனை மீட்கும் போராட்டத்தில்,
நாம் இறக்கவும் சித்தமாயுள்ளோம், நீயறிக!
உனை நெருங்கி, மிக நெருங்கி
நாம் வந்துவிட்டோம். இன்னும்
கொஞ்ச தூரமே பாக்கியிருக்கிறது.
நீ காண்பாய் பலஸ்தீனமே!
சுதந்திரத்தின் சாந்திமிக்க பேரொளியில்,
உன் வதனம் புதுப்பொலிவில் மின்னும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்திலிருந்து ஒரு பாடல்

*Mahmoud Dharwish*

உன் புனித மண்ணில்
நானிருக்கிறேன் பலஸ்தீனமே!
சின்னப் பனித்துளியில்,
சிலிர்ப்பூட்டும் உன் கதகதப்பில்,
உன் சோலைகளில்,
உன் படர்ந்த திராட்சைக்கொடிகளில்,
உன் மென்சிவப்புவண்ணத் தரையில்
நானிருக்கிறேன் பலஸ்தீனமே!
உன் நிலம்மீதில் எனது வேர்
ஆழமிக்கது.
எந்தப் புறக்கரங்களும் அதனை
பிடுங்கியெறிந்திட முடியாது.
காட்டுத்தனமான ஆக்கிரமிப்பென
களைகள் படர்ந்து வந்தாலும்,
நான் சமர் செய்வேன்.
என் என்புமச்சையை உறிஞ்சி,
சியோனிஸ காட்டுமிராண்டிகள்
எனைப் பட்டினியில் போட்டாலும்,
நான் அழமாட்டேன் ஒருபோதும்.
என்னை அவர்கள்
அடிமைப்படுத்த முடியாது.
ஒரு பொற்காலம் வேண்டி
நான் போரிடுவேன்.
என் போராட்டம் நீண்டதும்,
கசப்புமிக்கதுமாய் இருக்கலாம்.
ஆனால்,
பலஸ்தீனத்தின் நாடோடி ஒருநாள்
திரும்பி வருவான்
உறுதியோடும், சுதந்திரத்தோடும்!!!



பலஸ்தீனத்தின் 'பிர்வா' எனும் கிராமத்தில் 1941ல் பிறந்தவர் 1948ல், இஸ்ரேல் உருவானபின்பு அவரது கிராமம் தரைமட்டமாக்கப்பட, அவரது குடும்பம் லெபனானுக்கு தப்பியோடியது. பின், பலஸ்தீனத்தின் 'கலீலி' என்ற ஊருக்குத்திரும்பினர். முதல் கவிதைத் தொகுப்பு அவரது19ம் வயதில் வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்திலிருந்து ஒரு பாடல்.

..................

பழைமைமிகு ஜெரூஸலத்தின்
வீதியைக் கடந்து போகையில்,
முன்னம் நானறிந்த வீடுகளுக்கண்மையில்
துயர்கவிந்த கண்களொடு நிற்கிறேன். நகரத்தின்
வாயிலில் எனை வெளியேற்றித் துடைத்து
விரட்டிய ஞாபகங்களால்.
முன்னம் இங்கொரு தேசமிருந்தது;
வெயிலென்றும், காற்றென்றும்
பாராது,மகிழ்வோடுழைத்த கரங்களிருந்தன இங்கே;
பளிச்சிடும் ஜன்னல்களில்
தம் சின்னஞ்சிறு கைகளில்
புத்தகங்களையேந்திய
சிறார்களைச்சுமந்த வீடுகளிருந்தன. ஆனால்,
ஒரு இருண்ட இரவில்
இவ்வில்லங்களின் நிழலினூடே
எவர்க்குந்தெரியாது,
ஒரு பெருந்துயரம் நடையிட்டது.
அரக்கக்கைகள் அவ்வில்லங்களைப்
பிடுங்கியெறிந்தன.
வீடுகள் யாருமற்றதோர்
பாழ்நிலமாயின.
நான் ஜெரூஸலத்தின் பழைய வீதிகளில் நின்று
அலறுகிறேன்.
என் பாடல் இடிமுழக்கமென
மாறட்டும்.
புயல்நிறைந்த மனசாட்சியைச் சுமக்கும் என் குரல்
கேட்டேனும்
அவர்களது மனசாட்சி
விழித்தெழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ர∴பா'வின் குழந்தைகள்.

*Samih Al-Qasim*

பல்லாயிரம் பேர்களது புண்களில்,
தம் பாதையை உருவாக்கப்போனோரே! நம்
அழகிய ரோஜாத்தோட்டங்களை உமது
பீரங்கிகள் கொண்டு சிதைத்தோரே!
எம்மில்லங்களின் யன்னல்களை இரவுகளில்
திருட்டுத்தனமாய் உடைத்துப்போட்டோரே! நம்
பயிர்களுக்கும், கனித்தோட்டங்களுக்கும்
தீ மூட்டிப்போனோரே!
நெருப்புக்கொள்ளிகளுக்கு
'ர.'.பா'வின் குழந்தைகள்
ஒரு பாடல் சொல்கிறார்கள்:- உங்கள்
தங்கப்பற்களைப் பிடுங்கியெடுத்துக்கொண்டு,
கொலையுண்ட உமது சடலங்களின் முகங்களில் நாம்
துப்புவதில்லை.
எம் வளங்களைச் சுரண்டி, ஏன்
குண்டுகள் தந்துபோனீர்?
அராபிய வீரக்குழந்தைகளுக்கு ஏன்
அநாதைப்பட்டம் தந்துபோனீர்?
ஆயிரம் நன்றிகள் உமக்குரித்தாகுக!
நாம் வளர வளர
துயரங்களும் கூடவே வளர்கின்றன.
ஆதலினால், நாம் சண்டையிடச்சித்தமானோம்!
சண்டையிடச்சித்தமானோம்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரங்களின் பூவே!

***Fayrous***
***(Famous Lebanese Singer)***

ப்ரார்த்தனையின் நகரமே!
உனக்காக நான் ப்ரார்த்திக்கிறேன்.
புகழ்மிக்க இல்லங்களின் இருப்பிடமே!
நகரங்களின் பூவே!
ஜெரூஸலம்! ஜெரூஸலம்!
ப்ரார்த்தனையின் நகரமே!
எம் கண்கள் தினந்தோறும்
உனை நோக்கிப் பயணிக்கின்றன.
உன் பக்திமிக்க வீடுகளின் வாசல்களைச்சுற்றியும்,
உன் பழைமைமிகு
ஆலயங்களை அணைத்துக்கொண்டும்,
உன் பள்ளிவாயில்களின்
துயரங்களை விலக்கிக்கொண்டும்,
இந்தக் கண்கள் உனை நோக்கிப் பயணித்தபடியிருக்கின்றன.
ஓ! இரவின் நகரமே "இஸ்ரா'!
சுவர்க்கத்தின் வாயிலே!
உனை நோக்கியே நம் கண்கள் பயணித்தபடியிருக்கின்றன.
நான் ப்ரார்த்திக்கிறேன்.
குகைக்குள்ளிருக்கும் குழந்தையே!
அவன் தாய் மர்யமே!
அழுது புலம்பும் இரு முகங்களே!
பல்லாயிரம் குழந்தைகளின்
இருப்பிடங்களை வீணாக்கியமைக்காய்,
பாதுகாப்புத்தேடி நிற்கும் அபலைகளுக்காய்,
வாசல்களில் நின்று காவல் காத்த
உயிர்த்தியாகிகளுக்காய்,
சமாதானத்தின் பொருட்டு
சமாதானத்தின் நிலம்
காவு கொள்ளப்பட்டுள்ளது.
நீதி வாயில்கதவுகளின் அருகில்
விழுந்து கிடக்கிறது.
ஜெரூஸலத்தின் புனிதபூமி வீழ்ந்திடுமாயின்,
அன்பு பின்வாங்க நேரும்.
போரின் தீச்சுவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுஷமனங்களில் எரியும்.
குகைக்குள்ளிருக்கும் குழந்தையே!
அவன் தாய் மர்யமே!
அழுது புலம்பும் இரு முகங்களே!
நான் ப்ரார்த்திக்கிறேன்.
கடும் சினம் கொப்பளிக்கிறது.
நான் துயரங்களை மிதித்தபடி நடப்பேன்.
கடும் சினம் எல்லாப்புறமிருந்தும்,
பெருந்திகிலெனுங் குழந்தையாம்
குதிரை மீதேறி, வந்துகொண்டிருக்கிறது.
வலுநிறைந்த கடவுளின் முகமென
அது வருகிறது, வந்துகொண்டிருக்கிறது.
எம் நகரத்தின் வாயில்
இனியொருபோதும் மூடப்படாது.
நான் ப்ரார்த்திக்கப்போகின்றேன்.
நான் கதவுகளைத் தட்டுவேன்;
நான் கதவுகளைத் திறப்பேன்.
ஜோர்தானின் ஆறே!அரக்கர்களின் காலடித்தடங்களை
அழித்துப்போங்கள்.
சர்வாதிகாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும்
கோரமுகங்களைக் கிழிக்குமாப்போலோர் கடுஞ்சினம்
புறப்பட்டு வருகின்றது.
இந்த இல்லம் எங்களது!
ஜெரூஸலம் எங்களது!
எம் சொந்தக் கைகளின் வலிமைகொண்டு,
நாமிதன் பிரகாசத்தைப் பேணுவோம்.
அதே கைகளில்
ஜெரூஸலத்திற்கான அமைதியை
நாம் மீளக்கொணர்வோம் அறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு - காட்சி - நிஜம்

*Kanzul Wahab*

உயரே பறக்கும் அது என்ன பறவை?
வானத்தின் ஒரு புள்ளியென
அதை நான் காணுகிறேன்.
அது தன் சிறகுகளை
அகல விரிப்பதைக் காணுகிறேன்.
அது விடுதலைப்பறவை.
ஒரு போராளி அதை வழிநடத்துகிறான்.

அது தன் இருப்பிடமடையுமா?
எப்போது அது நிகழும்?
நான் தொலைவுவரை பார்க்கின்றேன்.
ஏனெனில்,
அதை நான் பார்த்தாகவேண்டும்.
அது கீழ்நோக்கி குனிந்து வருகிறது.
ஒரு கோட்டினருகே அது வட்டமடிக்கிறது.
அந்த நிலத்தை நான் கூர்ந்து பார்க்கிறேன்.
ஆமாம்! அது பலஸ்தீன மண்ணில் கூடடைகிறது.

அதன் பின்புறத்தே
போராளியின் பிரகாச வழிகாட்டல்.
அது அழகிய காட்சியென மின்னும்.
பலஸ்தீனம் மகிழ்ந்திருக்கிறது.
அது தன் புதல்வர் வருகையால்.
தொலைத்திருந்த அன்பை
அவர்கள் தேடியெடுத்து கொணர்கிறார்கள்.

இரவின் அமைதிக்கூடே
ஒரேயொரு குண்டு பாய்கிறது.
புதிதாய், பிரகாசமாய்,
ஒரு வைகறை புலர்கிறது.
பலஸ்தீனத்தின் போராளி ஜெயிக்கிறான்.
நான் என் கண்கள்மூடி,
அந்தக் காட்சியைப் பார்க்கிறேன்.
பலஸ்தீனம் விடுதலை காண்கிறது.
தீபம் ஏற்றப்பட்டாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீனம் மிளிர்கிறது.
சியோனிஸம் போகின்றது.
இது சூர்யோதயம்! இது சிரிப்பு!
இருள் இனியிங்கே இல்லை
எப்போதுமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குச் சொந்தமானதை நான் கேட்கிறேன்

***Kanzul Wahab***

என் அழகிய திரு நிலமே! நீயெங்கே?
உன் மண்மீது விழவும்,
உன் வளியைச் சுவாசிக்கவும்
நான் எந்தளவு ஏங்குகிறேன் அறிவாயா?
என் பெருமதிப்புக்குரிய மண்ணே! நீயெங்கே?
தன் உரிமைமிக்க புதல்வனிடமிருந்து
ஏனுன்னை அவர்கள் பிரித்தனர்?
என் அன்பான தாய்மண்ணே!
நீ துயருற்றுக்கிடக்கிறாய்.
பயப்படாதே உன் சேயினன்பு
ஒருபோதும் மாறாது.

"எங்கே நீ?" நம்மைக்கேட்கிறாயா நீ?
நாம் வாழுகிறோம்
உன் நிலத்துக்கு அப்பாலேனும்.
வைகறை தொடங்கி இரவுவரை,
உனை வந்தடையப் பிரார்த்திக்கிறோம்.
உனதழைப்பை நான் கேட்கிறேன்.
என்னுயிர் மண்ணே!
இந்த வதைக்கும் கதறலை
நீ கேட்கிறாயா என் தாயே?
உனதழைப்பு கேட்கிறது.
நான் அதனைப் புரிந்து கொண்டேன்.
வலிமையுடனும், வீரத்துடனும்,
வோஷணைமிக்க ஆகாரத்துடனும்
நாம் உன்னை வந்தடைவோம்.

இரவும், பகலும் உனைப்பற்றிய கனவே.
தாமதமின்றி உனை வந்தடையும் கனவு.
ஓ! இறைவா! என் பொறுமையை சோதிக்கிறாய் நீ.
ஆயினும் இந்தக்கொள்ளைக்காரர்கள்
கூட்டிலடைக்கப்படும் அந்நாள்
வந்தே தீரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாம் உனது! நீ எமது! பலஸ்தீனமே!
என் அழகிய திருநாடே!
என் எல்லாமும் உனக்கே சமர்ப்பணம்!
என் மண்ணைக் கொள்ளையிட்டவனே!
என் சவால் இதுவென அறிக நீ!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற நாட்டுக்கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேஸம்

*Roy Croft*

நான் உன்னை நேஸிக்கிறேன்,
நீ எதுவாக இருக்கிறாய்
என்பதற்காக மட்டுமல்ல;
உன்னோடிருக்கையில்
நான் எதுவாக இருக்கிறேன் என்பதற்காகவும்
நான் உன்னை நேஸிக்கிறேன்.

நான் உன்னை நேஸிக்கிறேன்,
உன்னை நீ எங்ஙனம் நிர்மாணித்திருக்கிறாய்
என்பதற்காக மட்டுமல்ல,
நீ என்னை எங்ஙனம் செதுக்கினாய் என்பதற்காகவும்
நான் உன்னை நேஸிக்கிறேன்.

நான் உன்னை நேஸிக்கிறேன்.
நீ என்னில் வெளிக்கொணர்ந்த
என் பாகங்களுக்காக
நான் உன்னை நேஸிக்கிறேன்.

நான் உன்னை நேஸிக்கிறேன்.
என் சுமை நிறைந்த இதயத்தின் மீது
வருடிச்சென்ற நின் கரங்களுக்காக,
உன்னால் கூட மாற்றவியலாமற்போன
என் முட்டாள்தனச்செயல்களையும்
மோசமான பலவீனங்களையும்
கடந்து நின்றும் என்னைக் கவனித்தமைக்காக,
கண்டுபிடிக்கமுடியாத்தொலைவில்
யாருமே கண்டுகொள்ளாத
எல்லா என்னெழில்மிகு உடைமைகளையும்
வெளிச்சத்திற்குவெளிக்கொணர்ந்தமைக்காக
நான் உன்னை நேஸிக்கிறேன்.

நான் உன்னை நேஸிக்கிறேன்,
வெட்டி வீழ்த்தப்பட்ட என் பட்டுப்போன வாழ்க்கை
விருட்சத்தில் ஒரு சத்திரத்தையன்று,
ஒரு கோயிலையே நீ உருவாக்கினாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வின் நாளாந்தக் கடமைகளில் கடிந்து
பேசாமல் சிந்துபாடி மட்டுமே என்னை நீ பண்படுத்தினாய்.

நான் உன்னை நேஸிக்கிறேன்,
என்னை சரியாக ஸ்தாபிக்க
வேதங்கள் கூடச்செய்யமுடியாத
அனைத்தையும் நீ செய்தாய்.
என்னைச் சந்தோஷிக்க வைக்க
எந்த விதியும் செய்யாத அனைத்தையும் நீ செய்தாய்.

ஸ்பரிசங்களேதுமின்றி,
வார்த்தைஜாலங்களின்றி,
சைகைகளின்றி,
அடையாளங்களின்றி,
நீ நீயாகயிருந்து மட்டுமே
இவைகளைச்செய்தாய்.
எல்லாவற்றுக்குமப்பால்
நல்ல நண்பனாகயிருப்பதன்
அர்த்தமே இதுதான் நண்பனே......!!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெது நடனம்

***Dr.Dennis Shield***

'மெரி-கோ-ரவுண்டில்'
சுற்றிவரும் சின்னஞ்சிறுசுகளை
என்றேனும் நீ பார்த்ததுண்டா?
அல்லது,
தரையை அறைகின்ற
மழைத்துளிகளின் சப்தந்தனை நீ கேட்டதுண்டா?
படபடத்துச்சிறகடிக்கும் வண்ணத்துப்பூச்சியை
என்றேனும் நீ பின்தொடர்ந்ததுண்டா?
அல்லது,
பகலின் நிறம்மங்கி
வாடிச்செல்கின்ற இரவுள் சென்று நுழையும்
சூரியனின் சிவப்பை
சற்றேனும் நின்று
இமையாது நோக்கியதுண்டா?

நீ சற்றுத்தாமதிப்பது நன்று.
அத்தனை வேகமான நர்த்தனம் வேண்டாம்.
காலம் குறுகியது
இந்த இசை நெடுநேரம் நீடிக்காது.

ஒவ்வொரு நாளும்
பறந்து பறந்து ஓடுகிறாயா நீ?
'எப்படியிருக்கிறாய்'என
யாரையேனும் நீ
நலம் விசாரித்து
அதற்காய்க்கிடைக்கப்பெறும்
பதிலைக்கேட்டிருக்கிறாயா என்றேனும்?
தொடரவிருக்கும் நூறாயிரம் கடமைகளின் நினைவை
உன் மண்டையோட்டுக்குள் சுழலவிட்டபடிதான்
நாளின் இறுதியில் உன் படுக்கையில்
நீ சாய்ந்து கிடக்கிறாயா?
நீ சற்றுத்தாமதிப்பது நன்று.
அத்தனை வேகமான நர்த்தனம் வேண்டாம்.
காலம் குறுகியது
இந்த இசை நெடுநேரம் நீடிக்காது.
'அதை நாளை செய்வோமே' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் குழந்தையிடம் நீ
எதையேனும் எப்போதேனும் சொன்னதுண்டா?
துரிதமாய் இயங்க அவன்படும் அவஸ்தைதனை
நீ பார்த்ததேயில்லையா?

உன் நேரமின்மைகளின் சாபத்தால்
மெல்லிய ஸ்பரிசங்களையிழந்து,
'ஹாய்' என அழைக்கவும் சொல்லவுமான
நல்ல நேஸப்பகிர்தல்களை
கொன்று நீ வாழ்ந்திருக்கிறாய்!

நீ சற்றுத்தாமதிப்பது நன்று.
அத்தனை வேகமான நர்த்தனம் வேண்டாம்.
காலம் குறுகியது
இந்த இசை நெடுநேரம் நீடிக்காது.
எங்கேனும் வேகமாய்ச் சென்றடையயெண்ணுகின்ற
உன் அவசரங்களால்
அந்தக்கணங்களில் நீ பெறவிருந்த
சந்தோஷங்களின் சிலிர்ப்புகளில் பாதியை
இழந்தே வந்திருக்கிறாய் நீ எப்போதும்!
உன் நாட்களுக்குள் பிரவேசித்தலும்,
அவைபற்றியே சதா பதறுதல் ஆனதும் வீசியெறியப்பட்ட,
என்றுமே திறந்து பார்க்கப்படாத, பரிசுப்பொருளுக்கு
ஒப்பானது.
ஜீவிதம் ஓட்டப்பந்தயமன்று.
மெதுவாய், நிதானமாய்
அடியெடுத்து வை.
அந்த அழகிய இசையைச் செவிமடு,
பாடல் முடியுமுன்னே.......!


நியுயோர்க் வைத்தியசாலை ஒன்றில் புற்றுநோயின் காரணமாக வாழ்வின் இறுதிக்கணங்களை எதிர்பார்க்க நேர்ந்திருக்கிற ஒரு நோயாளிச் சிறுமியின் கவிதையிது. Dr.Dennis Shield இதை அனுப்பி வைத்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் மனைவி

*D.H.Lawrence [1885-1930]*



உன்னை நேஸிப்பதில்
இருக்கும் வலி,
என்னால் தாங்கிட
முடியாதளவு பெரிது.

நின்னைப்பற்றிய அச்சத்தில்
நான் நடக்கிறேன்.
நீ நிற்குமிடத்திருந்து
இருள் ஆரம்பமாகிறது;
நீ என்னைப்பார்க்கையில்,
நின் நயனங்களுக்குள்ளிருந்து
இரவு ஆரம்பமாகிறது.

ஓ! சூரியனோடு கூடவே,
நிழலும் வாழ்கிறதென்பதை
இதற்குமுன்னம்
நானறிந்திலேன்.

எப்போதும் தாம் துரத்திவிரட்டுகின்ற
நிழலைப் பார்ப்பதற்காய்,
எல்லா உயர்ந்த மரங்களும்
சூரியனுக்கு தமது முதுகுகாட்டித் திரும்பி
பூமி பார்த்தபடியிருக்கின்றன.

எல்லா மிளிர்ந்தொளிரும்
பொருளினதும் பாதங்களினடியே,
மேல்நோக்கிப் பார்த்தபடி,
இரவு இருக்கிறது.

ஓ! நான் பாட வேண்டும்.
ஆட வேண்டும்.
ஆயினும்,
நிழலிலிருந்து என் கண்களை
என்னால் உயர்த்த முடியவில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கிண்ணத்தைச்சுற்றி
இருள் கவிந்து கிடக்கிறது.

என்ன இது?
உற்றுக்கேள்!
தளர்வுற்ற அழகு
காற்றில் பொங்கும் சப்தந்தனை,

சங்குக்குள் பொங்கும் ஒலியென!
காட்டுப்பூ மணியசைக்கும்
வானம் பாடி நீலமாய் ஒளிருமிடத்தே,
மரணத்தின் பொங்கும் ஓசையும் கூடவே!

உன்னை நேஸிப்பதில்
இருக்கும் வலி,
என்னால் தாங்கிட
முடியாதளவு பெரிது

## *D.H.Lawrence-*

தந்தை ஒரு நிலக்கரித்தொழிலாளி. தாய் ஒரு பள்ளியாசிரியை. அடிப்படையில் இவர் ஒரு நாவலாசிரியர். எனினும், அற்புதமான கவிஞனும் கூட. எழுதுவதற்கா கவே தன் ஆசிரியத்தொழிலையும் கைவிட்டார். தன் எழுத்தினூடு வகுப்புவா தத்தையும், நகரமயமாக்கலையும், நவீனவாழ்வின் யந்திரத்தனத்தையும் எதிர்த்து நின்றார். சமூகப்பிரச்சினைகளால் சிதைவுக்குள்ளாகின்ற அன்புபற்றி எப்போதும் வாஞ்சை கொண்டிருந்தார். ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான உண்மை யான காதலின் மகத்துவத்தை எடுத்துக்கூறி, அவர்களுக்கிடையேயான கொடூர சமத்துவமின்மைகளையும், முரண்பாடுகளையும் சாடுவனவாக அமைந்தன அவ ரது எழுத்துக்கள். காதலின் மகத்துவம் கூறுவன அவர் எழுதிய 'Sons and Lovers'[1913], 'The Rainbow'[1915], 'Woman in Love'[1921], Lady Chatterley's Lover'[1928] நூல்கள். தொலைந்துபோன நிம்மதிதேடி மெக்ஸிகோ, இத்தாலி, சிசிலி, சாடினியா என அலைந்துதிரிந்து காசநோயின் காரணமாக,45ம் தன் இள வயதிலேயே Franceஇல் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.இக்கவிதையில் ஒரு இளம்மனைவியின் குரலைக் கேட்கிறோம்.அவளது நேஸிப்புக்குரிய ஒன்றோடு அவள் அச்சத்தையும், இருளையும் தொடர்புபடுத்துகிறாள்.Lawrenceஜப் பொருத் தவரை,அன்புப் பரிமாறல் என்பது வெறும் உடல் மகிழ்ச்சிக்கு மட்டுமன்று. பாலியலில் புதைந்திருக்கும் புனிதத்தை அவர் எப்போதும் போற்றினார். கற் பையும், ஒருதாரக்கொள்கையையும் அவர் எப்போதும் மதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயம்

*Gabriela Mistral*

என் குழந்தை குருவியாய் மாறவேண்டுமென்று
எனக்கு ஆசையில்லை.
என். வாசல்வழி மீண்டுவராமலேயே,
அவள் வானவெளிக்கு பறந்துபோய்விடலாம்.
அன்றி,
அவள் கூந்தலை வாரிப்பின்னலிட,
என் கைகள் நீளமுடியா உயரத்தில்,
அவளது கூடும். கூரையும் அமைந்துவிடலாம்.
எனவே,
என் குழந்தை
குருவியாய் மாறவேண்டுமென்று
எனக்கு ஆசையில்லை.
என் குழந்தை
ராஜகுமாரியாய் மாறவேண்டுமென்று
எனக்கு ஆசையில்லை.
சின்னத் தங்கச்சப்பாத்துகளை அணிந்தபடி.
வயல்வெளிகளில்
அவள்
விளையாடுவது எங்ஙனம்?
இருள்போர்த்திய இராக்களில்
என் அருகாமையில்
அவள்
உறங்குவது எங்ஙனம்?
எனவே,
என் குழந்தை
ராஜகுமாரியாய் மாறவேண்டுமென்று
எனக்கு ஆசையில்லை.
இன்னும்
ராணியாய்
என் குழந்தையை
முடிசூட்டிப்பார்க்க
எனக்கு ஆசையில்லை.
என் பாதங்கள்
ஏறிடமுடியாத்தொலைவுவரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவளது சிம்மாசனம்
உயர்ந்து விடலாம்.
இரவின் போதுகளில்
அவளை என் மடியிலிட்டுத்தாலாட்ட, என்னால் முடியாது போகலாம்.
எனவே,
என் குழந்தையை
ராணியாய் முடிசூட்டவேண்டுமென்று
என்றுமே எனக்கு ஆசையில்லை....!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவே...!!!

மூலம்:- ***David Diop,*** ஆங்கிலத்தில்:-***Ulli Beier***

ஆபிரிக்காவே! என் ஆபிரிக்காவே!
மரஞ்செடிகள் படர்ந்திரா
பொட்டல்வெளிகளில் நின்றபடி போராடிய
பெருமைமிகு பெருவீரர்களின் ஆபிரிக்காவே!
தொலைதூர ஆற்றங்கரையில் நின்றபடி,
பாடிக்கொண்டிருந்த
என் பாட்டிமார்களின் ஆபிரிக்காவே!
உன்னை நான் என்றுமே அறிந்தவனில்லை.
ஆயினும், என் நரம்புகளில் உன் ரத்தமே ஓடுகிறது.
நீ சிந்திய இரத்த வியர்வையால்,
உன் கர்ணகடூர உழைப்பால்,
உன் குழந்தைகளின் அயரா ஊழியத்தால்,
இந்த வயல்வெளிகளுக்கெலாம் நீர்பாய்ச்சிய
உன் அழகிய கறுப்பு ரத்தமே
என் நரம்புகளில் ஓடுகிறது.
சொல் என் ஆபிரிக்காவே!இது நீதானா?
நடுநிசிச் சூரியனின் சாட்டையடிகளுக்கு
'ஆமாம் சாமி'போட்டதில் உருவான
செந்நிறத் தழும்புகளாலும்,
கர்வத்தை பங்கப்படுத்தியதன் சுமையாலும்
நடுநடுங்கியுடைந்து,
சிதைந்து சிதிலமான உன் முதுகெலும்புகளா
இவை?
புதைகுழியிலிருந்து ஓர் குரல் எனக்கு பதிலிறுக்கிறது:-
பலம்மிக்க என்
மைந்தனே...இளையவனே...!
வெள்ளை நிறத்தே வெளிறிப்போன
காய்ந்த பூக்களுக்கிடையே
இந்த மரம் தனித்துக்கிடக்கிறது! அதுவே
உன் ஆபிரிக்காவென அறிக நீ.
இந்த மரம் மீண்டும் தளைக்கும்.
பொறுத்திரு! பிடிவாதமாயிரு!
கசப்பேயாயினும்,
விடுதலையின் கனிகளை என்றேனும்
இந்த மரம் சுவைக்கத் தந்திடும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தாமரைப்பூவுக்கு...!

*Umanath Bhattacharya*
*(Translated from Bengali)*

ஓ! தாமரைப்பூவே!
என் கனவுகளின் தாமரைப்பூவே,
உன்னைச்சுற்றி வட்டமிடும்
இந்த தேனீயைச் சபித்துவிடாதே!
ஏனெனில், அஃது என் இதயம்!
தயவுடன் வேண்டுகிறேன், உன்
இதழ்களை மூடி,
இவனது வழக்கை நிராகரித்து விடாதே!
இவனது அழகிய ராகங்களைக் கொஞ்சம்
கேள்.
அதன் அர்த்தங்களைக் கண்டுகொள்ள
முயன்றுபார்
பக்கம் சாராதே கண்மணீ,
இவன் சாதாரண கரும் தேனீயன்று;
சராசரிக் காதலனுமன்று;
இவனது நேஸமனம் பொன்கொண்டு வார்க்கப்பட்டது.
உனதான பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டுச் செல்ல,
அந்த ஈயை அனுமதித்து விடாதே- முட்டாளாகாதே!
எந்த அழுத்தங்களுக்கும் கீழ்ப்படிந்துவிடாதே!
இந்தத் தேனீயின் துதிப்பாடலை
ஏற்றுக்கொள்.
இவ்வாசைக் கற்பனைகளை நெய்து,
உன்னைக் கடவுளாக்க இவனை அனுமதி.
இவன் தன் பரமானந்தத்தின் உச்ச எல்லை
அதுதான் கண்ணே.............!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

*Jeyasree Bhadra*

சூரியனின் மெல்லிய வெளிச்சம்
மாலை நேரப் போர்வையிட்டிருக்கிறது.
என் வேலைகள் செய்து முடிக்கப்பட்டாயிற்று.
நான் உன் அழைப்புக்காய்க்
காத்துக்கிடக்கிறேன்.
அன்பே! தன்னந்தனியே காத்துக்கிடக்கிறேன்.
இரவு விளக்குகள் இன்னும் எரியவிடப்படவில்லை.
கோயில்மணி இன்னும் ஒலிக்கவில்லை.
மாலைப்பொழுது,
கிளைகிளையாய் நகர்கிறது.
மௌன மொழியிலே என் இதயம் அழுகிறது.
நான் உனக்காகவே ஜீவித்துக் கிடக்கிறேன்.
என் சினேகமே!
நினைவுகள் எனைக் கொல்கின்றன.
நீ இறந்து போனாலும்,
நின் நினைவுகளோ, இந்த முடிவற்ற வேதனைகளோ
இறந்து போகாது!
பூத்துக் குலுங்கும் செந்நிற ரோஜாக்களிலே,
உயரே ஒளிரும் நட்சத்திரங்களிலே
என் சினேகம் மலர்ந்து கிடக்கிறது.
என்னுயிரே!நீயே இறந்து போனாலும்,
உனக்கான என் சினேகம் சாகாது!!!இன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று

*Tanya Ferdinandusz*

ஆதலினால் இன்று,
உன்னழகை உயிரோட்டத்தோடு
நான் நாடி நிற்க என்னை அனுமதி!
பின்,
என் இருப்பின் பகுதியாய் அதை
நெறிப்படுத்தவும், உட்பதிக்கவும்
என்னை அனுமதித்து விடு.
உன் நகைச்சுவையை ஆராயவும்,
என்மீது அதனை நீ பிரயோகிக்கையில்,
நன்மையளிக்கத்தக்க ஆரோக்கியச் சிரிப்பை
நான் ரசித்திருக்கவும் கூடவே என்னை அனுமதி.
உன் வலிகளுக்காய் நான் துயருறவும்,
மூலமாய், என் கண்ணீர்துளிகளை
நான் உலர்த்திக் கொள்ளவும் என்னை அனுமதி.
காலை வரும் மகிழ்ச்சி; ஞாபகம் கொள்!
உன் புறமிருந்து கற்கையில்,
மாறாத கவனத்தை உன் கற்றலின் மீது
நான் செலுத்தவும்,
என் இதயத்தின் மீதில்,
உன் பாடம்தனை பதித்திடவும்,
என்னை அனுமதித்துவிடு.

நீயே நாளை இல்லையென்று போனாலும்,
ஆனந்த ஞாபகங்களேனும் எஞ்சலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஹிருதயம்

*Pygmy (Africa)*

என் ஹிருதயம்
நிறைந்த மகிழ்ச்சியில் களிக்கிறது.
அந்த வனத்தே,
மரங்களினடியில் என் ஹிருதயம்
பாடுதலில் சிறகுகட்டிக் குதூகளிக்கிறது.
அந்த வனம் எங்கள் வசிப்பிடம்.
இன்னும் சொல்வதாயின், எங்கள் தாய்.
என் நூலிழை மீதில்,
ஒரு சிறிய
சின்னஞ்சிறிய பறவையை நான் எடுக்கிறேன்.
என் ஹிருதயம்
அந்த நூலிழை மீதில் இணைக்கப்படுகிறது,
மறுமுனையில் அந்தப் பறவையுடன்!!!



குறிப்பு:அனுராதபுர மாவட்ட 'மல்லிகை' சிறப்பிதழில், மும்தாஜ் முபாரக் என்ற எனது புனைப்பெயரில், வெளியானது இக்கவிதை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியின் எதிர்பாராப் பாடல்

*Iglulik Eskimo*

முன்னொருபோதும்
நான் சந்தித்திராத் திருமுகங்கள்
நான் பார்க்கவென்று
எனக்குப் பரிசளிக்கப்பட்ட நாள்தொடக்கம்,
என் வசிப்பிடத்தைச் சுற்றியிருக்கும்
நிலப்பகுதி மிக அழகானது.
எல்லாமே அழகு;
அழகு.
வாழ்க்கை எப்போதும்
நன்றி நிறைந்தது.
என் இல்லத்தை அற்புதமென்றாக்கிய
என் விருந்தினர்கள்........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சிறுவனாயிருந்தபோது!

*Eskimo (Arctic)*

நான் சிறுவனாயிருந்தபோது
ஒவ்வொரு நாளும்
ஒரு புது விஷயத்தோடு
புலர்ந்திருந்தது.
ஒவ்வொரு சாயங்காலமும்
மறுநாளினது
வைகறை ஒளியைச் சுமந்தபடி
முடிவுற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபகம் வருமா எனக்கு...?

***Richard J.Margolis***

சிறு பராயத்தில்
எப்படித் தெரிந்தேன் நான்?
எதையெல்லாம் செய்தேன் நான்?
எதைப்பார்த்தெல்லாம்
புதுமையுற்றேன் நான்?
ஞாபகம் வருமா எனக்கு?
என் முதுமைப் பராயத்தே,
யாராய் இருப்பேன் நான்?
நானாகவேவா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவையின் பாட்டு

***By: Anonymous child***
***Written in Terezin Concentration Camp***

அஃது அறியாது,
உலகம் பற்றி எதுவும்,
தன் கூட்டில் வெளியேறிப்போகாது
தங்கியிருப்பது யாரென்பது பற்றியும்,
பறவைகளுக்கு
எதுபற்றி அதிகம் தெரியும் என்பதுவும்,
இவ்வுலகம்
அழகினால் நிரம்பி வழிதல் பற்றி
நான் பாட நினைப்பதெதுவும்,
அஃது அறியாது;
புல்வெளிமீதில் பனித்துளி மின்னுகையில்,
காலைப்புலர்வில் ஒளி பூமியை ஊடுருவுகையில்,
இரவின் பின் புலரும் வைகறையை வரவேற்று,
கருங்குருவி புதர் மேலிருந்து பாடுகையில்,
நானறிகிறேன்
வாழ்தல் எத்தனை அற்புதமென்று.
ஹேய்,
அழகின் திசையில்
உங்கள் ஹிருதயங்கள் திருப்புக.
எப்போதாவது
தோப்புவழியில் நடந்து
ஞாபகங்களின் மலர்மாலை ஒன்றை,
ஆங்கே நெய்து திரும்புக.
கண்ணீர் வந்து கண் மறைத்தால்,
ஜீவித்திருப்பது எத்தனை அற்புதமென்று
நீங்களும் அறிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்தறியினது பாடல்

***Tewa Indian***

எமது தாய் பூமியே,
எனது தந்தை வானமே,
உமது குழந்தைகள் நாம்.
நீங்கள் நேஸித்தவற்றையெல்லாம்
உமக்கான பரிசுகளாக
வெகு சிரமத்தடன் கொணர்ந்திருக்கிறோம்.
ஆதலினால்,
பிரகாசத்தின் ஆடைகளை
நமக்கென நெய்திடுக.
காலைப்பொழுதின் தூயபுலர்வு
அதன் மேற்புறத்தை அழகுபடுத்தட்டும்!
அந்திமாலையின் செந்நிற வெளிச்சம்
அதன் குறுக்கு நூலிழையில் நெய்யப்படட்டும்!
சுருக்கங்கள் மழைத்துளியின் அழகைச்சுமந்திருக்க,
அதன் ஓரங்கள் அழகிய வானவில்லின்
வடிவமென மாறட்டும்!
ஆதலினால்,
பிரகாசத்தின் ஆடைகளை
நமக்கென நெய்திடுக.
ஆயின்,
பறவைகளின் பாடல்கள்
ரம்மியமாய் ஒலித்திருக்க,
நாம் நடக்கலாம்.
இன்னும்,
பச்சைப் புல்வெளியின் பொலிவின் மீதில்
நாம் நடக்கலாம்.
ஓ! எமது தாய் பூமியே,
ஓ! எமது தந்தை வானமே....!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நானே அந்தத் தாள்..."

***From the Russian of Marina Tsvetaeva***
***Translated by Regi Siriwardena***

உன் பேனை
எழுதிச்செல்வதற்கான
தாள் நான்.
நீ சொல்லும் அனைத்தையும்
எழுதுவேன் நான்.
நானே அந்த வெள்ளைத்தாள்.
உன் அன்பை
சேமித்து வைக்கிற
களஞ்சியசாலை நான்;
அதிகரித்து
அதைவிட நூறு மடங்காய்
திருப்பித்தருவேன் நான்.

அந்தக் கிராமம் நான்,
அந்தக் கறும் மண் நான்.
நீயே என் வெளிச்சம்
நீயே என் ஈர மழைத்துளி.

என் பிரபு நீ
என் எஜமான் நீ.
நானே அந்தக் கறும் பூமி
நானே அந்த வெள்ளைத்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# N.P.க்கு...

*From the Russian of Anna Akhmatova*
*Translated by Regi Siriwardena*

இதயத்துக்கு
இதைவிட பதிலொன்று இல்லை.
என் குரலோசையோ
இன்பப் பெருவெளியிலும்
துன்பப் பிரளயத்திலுமாய்.
எல்லாமே
முடிந்து போயாயிற்று...
நீ இனியில்லையென்றான
என் வெறுமை மிகு இரவினிலே,
என் பாடல்கள்
பெரு ஓசையோடு
இனி ஒலித்தபடியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தூரத்துக் குரல்

*From the Russian of Anna Akhmatova*
*Translated by Regi Siriwardena*



உனக்கு எதிரிகள்
எவருமில்லை என்பதொன்றும்
நிஜமில்லை;
நீ இப்பூமியின்
வெறும் பெண்ணில்லை எனக்கு.
மழைக்காலச் சூரியனின்
சுகமான ஒளியும்,
என் பிறந்த மண்ணின்
அடங்காத பாடலுமே
நீயாகும் எனக்கு.
நீ இறந்துபோனால்
நான் அழமாட்டேன்.
துயருற்று,
"கல்லறையிலிருந்து
எழுந்து வந்திடு!"
என்றழுதரற்றி
பைத்தியமாகேன்.
அக்கணத்தே,
நான் மட்டுமேயறிவேன்..
சூர்யனின்றி
உடல் ஒன்றும்
உயிர்வாழாதென்பதுவும்,
உயிரோட்டமின்றி
பாடல் இல்லையென்பதுவும்.

Akhmatovaவின் முதல் கணவர் Nikolai Gumilyov, 1921ல் சோவியத் ஆட்சியாளர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரே பேசுவது போன்ற தொனியிலமைக்கப்பட்ட இந்தக் கவிதை, அவரது மரணத்துக்குப்பின் அவர் முன்னம் உபயோகித்த சில வார்த்தைகளையே பிரயோகித்து எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவிப்பு

மூலம்: ***Amrita Pritam***
ஆங்கிலத்தில்: ***Krishna Gorowara***
***& Kuswanth Singh.***

மெல்ல நடுங்கியபடி அவள் துயிலெழுந்தாள்.
பதைக்கும் மனசோடு படுக்கை விரிப்பைத்தடவி,
செக்கச்சிவந்திருந்த திரைத்துணியெடுத்து,
வெற்றாய்க்கிடக்கும் தன் மார்பகங்கள் மூடி,
நாணிச் சிவந்திருக்க,
தன்னருகே படுத்துறங்கும் மனிதனைப்பார்த்து
அவள் தன் கண்களுள் மிதக்கும்
கனவு சொல்லத் தொடங்கினாள்:-

“நீரோடைக்குள் என் பாதங்கள் நனைத்த
ஜனவரியிரவு ஞாபகம் உண்டா?
விறைக்க வைக்கும் குளிர் எனினும்
நீரோ விட்டுச்செல்ல மனசிலாதபடி கதகதப்பாய்!
நீர் தொட்டேன் நான், பாலாகிற்று நீரெல்லாம்.
அ∴தோர் அற்புதம். நான் பாலில் நீராடினேன்.
நிஜமாகவே அது அப்படியோர்
அற்புத நீரோடையோ..?இல்லை,
என் மனப்பிரமையா...? வெறும் கனவா..?
நீரில் நிலா மிதந்தது; கரமெனும் கிண்ணத்தள்ளி
நிலவருந்தினேன் நான்; என் ரத்தக்குழாய்கள் வழியே
வேகமாய் நகர்ந்த அந்நிலவு இதோ
என் கருவறையில்.

பெப்ரவரியின் தட்டிலிட்டு
வானவில்லின் ஏழு நிறங்கள்
கலவை செய்தேன் நான்!
இதழ்கள் மௌனத்தில் மூடிக்கிடந்தது;
மனசோ வியப்பில் மூழ்கிக்கிடந்தது.
என்னுள்ளிருக்குமிது என்றோ ஒருநாள்
என் வாழ்க்கையையே கதகதப்பாக்கிடும்.
ஒரு அழகுப்பட்சி என்னுள் கூடுகட்டிற்று.
இனி நான்
என்ன பிரார்த்தனைகள் புரிந்திடல் வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Amrita Pritam*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Amrita Pritam-*

பஞ்சாபிப்பெண்கவி; நாவலாசிரியர்; சிறுகதை எழுத்தாளர்.பஞ்சாபி இலக்கியத்துக்குப் பாரிய பங்களிப்புச் செய்தமைக்காக, 1956ல் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றவர். "சிறுவயதில் எனக் கொரு கனவு இருந்தது.அடர்ந்த காட்டுக்குள் நான் தனிமையில் சிக்கிக் கொள்கிறேன்.என்னைச்சுற்றிலும் ஐந்து சிங்கங்கள் என்னை உணவாகக் கொள்ளக் காத்திருக்கின்றன. 'நான் ஒரு கவிதை புனைய வேண்டும். புனைந்தபிறகு என்னை உண்ணுங்கள்.'என்கி றேன் நான்.சிரித்தபடி அவை எனக்கு பேப்பரும் பேனையும் வழங் கின. நான் எழுத ஆரம்பித்தேன். இப்போது, அந்த ஐந்து சிங்கங் களும் பஞ்சபூதங்களென நான் உணர்கிறேன்.இப்போதும் அவை என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன.எனினும்,அவற்றுக்கிடையே மனஅமைதியுடன் இருக்க நான் கற்றுக்கொண்டு விட்டேன்" என்கி றார் Amrita.

என்ன பிராயச்சித்தங்கள் செய்திடல் வேண்டும்?
சிலவேளை,
தாயாகப்போகும் ஒருத்தி
கடவுளின் முழுக்கவனத்தையும்
தனக்கென்று மட்டும் உரிமை பெற்றிருப்பாளோ?

கர்ப்பத்தின் ஆரம்ப காலம்!
முடிவற்ற ஆசைகளோடு
ஹிருதயத்தின் ஓய்வற்ற துடிப்பு!
என் பணிகள் நானே செய்வேன்.
திரவப்பால் திண்மக்கட்டியென
திரளுகின்ற விந்தையதை
திகைத்து ரசித்திருப்பேன்.
ஜாடிக்குள் கைவிட்டு என் பாற்கட்டியை
பொற்சூரியனின் பாதியென வடிவமைப்பேன் நான்.
இரண்டை ஒன்றெனவாக்கி நம்மை இணைத்ததெது?
விதியா? விதியா நம்மை இணைத்தது?
அவையே என் கனவுகளாயின மார்ச் மாதத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிலிருந்தே என் கருவறைக்கு
என்னூடே ஒரு கனவு நகரும்.
தொலைதூர பிரபஞ்சவெளியில் என் ஆன்மா
துடித்துத்தவிக்க இதயம் நடுங்கும்.
ஏப்ரல் அறுவடைக்காலம்.
என்னவகைத் தானியத்தை
அறுவடை செய்தேன் நான்?
அரிதட்டிலிட்டு தானியம் வேறு உமி வேறாய்
பிரித்தேன் நான்.என் பெருந்தட்டு
நட்சத்திரங்களின் மிளிர்வோடு ஒளிசிந்திற்று.

மே மாதத்தின் ஓர் பொன்னொளிர் அந்திமாலையில்
ஒரு புதுவித ஒலி கேட்டேன் நான்.
என்ன சப்தம் அது?
நிலத்தின் மீதிருந்தும், கடலின் மீதிருந்தும்
இசை பொங்கியெழ இ∴தென்ன
மாயாதேவியின் வினோதமா? இல்லை,
என் சுயத்தின் பிரதிமையா?
படைப்பின் உருவாக்கலின்போது
கடவுள் பாடும் துதிப்பாடலோ இது?
காற்றுவெளியையே நிரப்புமோர் அற்புத வாசம்.
கஸ்தூரியின் இந்நறுமணம் என் தொப்புளிலிருந்தா?
இதென்ன? அச்சம் எனைப்பற்றியிழுக்க,
மேல்வான மண்டலத்தெலாம் ஒலிக்கும்
அவ்வினோத இசையைச் செவிமடுத்தபடி,
தோப்புவழியே நான் நடந்தேன்.
இந்த இசைக்கு அர்த்தங்களுண்டா?
இந்தக்கனவுக்கு அர்த்தமேதுமுண்டா?
இந்த இசை, இந்தக்கனவு
எனக்கு எந்தளவு அர்த்தம்?
மற்றவர்களுக்கு எந்தளவு...?
காயமுற்றுத்துடிக்கும் பெண்மானென நான்.
என் வயிற்றின்மீது செவிவைத்து,
அவ்விசையின் அர்த்தம்தனை நான்
உணர முயன்றேன்.''

மெல்லெனப் புலருமோர் வைகறையில்,
மெல்லிதழ்கள் விரிக்கும் புதுமலர்போல்
அவள் கண்விழித்தாள் ஜூன் மாதத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் வாழ்வெனும் நீரோடை
மயக்கம் தரும் நீரால் நிரம்பிவழிய,
அந்நீர்வெளி மீதில்
ஓர் அன்னம் நீந்தக் கனாக்கண்டேன் நான்.
துயில் நீங்கி திடுமென நான் விழித்தபோது,
அவ்வன்னத்தின் சிறகுகள்
என் கருவறைக்குள்ளே
படபடத்துச் சிறக்டிப்பதாய் நான் உணர்ந்தேன்."
என்னருகே மனிதர்கள் இல்லை; மரங்களுமில்லை.
ஆயின், எங்கிருந்து வந்து இத்தெங்கின் கனி
என் மடிமீதில் விழுந்தது?
நான் அதனைப் பிளந்தேன்.
முற்றாத அப்பழத்தின் சுவை நீரருந்தவும்,
சுவைமிகு உட்பாகத்தை உண்ணவும்
மாந்தர் ஓடோடி வந்தனர்.
அவர்கள் அருந்துவதற்காய்
நான் கிண்ணத்தில் கொஞ்சம் ஊற்றினேன்.
எந்த மாயாஜாலமும் நான் நிகழ்த்தவில்லை.
எந்த மந்திரமும் நான் சொல்லவுமில்லை.
ஆயிரக்கணக்கானோர் திரண்டனர் என் வாசலிலே.
அனைவருக்கும்
தேங்காய்த்துண்டுகளைக் கொடுத்தேன்;
அவை பெருகின.
என்ன இனத்துத் தெங்கிது?
முடிவற்ற நூலென நீளும்
இந்த வினோதக்கனவுதான் என்ன?

மழை நனைத்த ஜூலை!
என் மார்புகளை நான் அழுத்தித்தடவினேன்.
தேங்காய்ப்பாலென அமுதம் சுரந்து
வெளிக்கிளம்பிற்று விரைவாக.
ஓ! ஓகஸ்ட் மாதம் என்ன அற்புதத்தை
எனக்காய்ச் சேமித்து வைத்திருக்கும்?
கடந்தவையெல்லாம் விந்தைகள் தான்;
என்னுள் வாழும் என் குழந்தைக்காய்
யார் உடைகள் தைப்பது?
ஒளித்துகள்களென மின்னும்
இரவின் மணித்தியாலங்களை
ஒரு தட்டிலிட்டுக் கோர்த்தேன் ஒவ்வொன்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்தேயிருக்க.
மகிழ்வும், துயரமுமாய் செப்டம்பர் வந்தது.
“என் உன்னத ஆன்மாவே! இந்த இழையை
யாருக்கென்று இத்தனை அழகாய்
நீ இழைக்கின்றாய்?
வானத்தின் அற்புத வலைபின்னும் நூலால்,
சூரியனின் தங்கமுலாமிட்ட நெசவில்,
நிஜமென அழைக்கப்படும் இஃது,
ஆடையென நெய்யப்படல் சாத்தியமோ?
என் வயிற்றினுக்கு நான் தலைவணங்கினேன்.
என் கனாக்களின் அர்த்தம் புரிந்தேன்.

இந்தக் குழந்தை உனதுமல்ல; யாரதுமல்ல.
என் கர்ப்பப்பையின் புனிதமான தீச்சுவாலை முன்
தன் கரங்களைச் சூடேற்றுவதற்காய்,
சற்றுத் தாமதித்துவிட்டதில் தங்கிவிட்ட
ஒரு யோகம் இதுவென்பேன் நான்.”

என் கனவுகளையும் நம்பிக்கையையும்
சதாகால நிஜமென்றாக்கிய ஒக்டோபர்!
எரிநெருப்பின் சுவாலை என்னுடலைத் தீய்க்கிறது.
யாரது அங்கே?

பூமித்தாயே என்மீது கிடத்தப்படல்போல!
ஐயோ! மருத்துவச்சியைக் கூப்பிடுங்கள்.
இதோ நான் ஒரு பிரசவத்துக்குத் தயாராகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறாமை

*Ruth Ellison*

மிருதுப்பட்டாய்,
ஆழ் மோனத் தவத்தில்,
பளபளத்துப் பூத்துச் சிவந்திருந்த
ரோஜா ஒன்றை
கைநீட்டி மெல்ல நான் பறித்தேன்.
கிறிஸ்துவின் புனித ரத்தம்தனை
ஏந்திய கோப்பையைத்
தாங்குமாப்போலோர் பக்திச் சிரத்தையுடன்,
உள்ளங்கையிலெடுத்து
அதன் முழுமை ரசித்திருந்தேன்.

இது போலொரு ரோஜா
நான் படைத்திடல் சாத்தியமா? இல்லை,
இத்தனை ரம்யமாய் நிறந்தீட்டல்
இயலுமோ எனக்கு?
பரம்பொருளளவு நான் படைப்பேனா? இல்லை,
இந்த ரோஜலாவண்யம் தந்த பரவசத்தை
வார்த்தைக்குள்ளேனும் அடக்குவேனா நான்?
ஆதலினால்,
என் உள்ளங்கையிலேந்திய பூவை,
மெல்ல என் விரல்களிடையிட்டு,
நசித்து நொறுக்கினேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கம்

*Lou Lipsitz*

முழு உலகமுமே
தூக்கத்திலிருப்பது போலவோர் கற்பனை.
அற்புதமான, தொல்லைகளில்லா
குளிர்காலக் காலைப் பொழுதொன்றில்,
முன்னொருபோது நான் உறங்கியது போலவோர்
நிர்மல உறக்கம்.

நான் காண்கிறேன்.
மனம் களைத்துப்போன
பல்லாயிரம் ஏழை மாந்தர்
பூமித்தாயின் குளிர் மேற்பரப்பில்
அமைதியாய்ப் படுத்துறங்க,
அரசின் அற்புத வீடுகளில்
தேசத்தலைவர்களும் வாய்பிளந்து
தத்தம் தலையணைகள் மீது
நிம்மதியாய்க் கிடந்துறங்குகிறார்கள்.
தொழில் வல்லுனர்கள்
தத்தம் வேலைத்தளங்களில்,
போர்வீரர்கள் தம் போராடைகள் களைந்து
தத்தம் கூடாரங்களில் உறங்கிக்கிடக்கிறார்கள்.

இறந்த காலத்தின் சிறுபராயக் கனவுகளில்
அனைவரும் மிதக்கிறார்கள். கூடவே,
புரிந்துகொள்ள முடியா இருளைப்பற்றியும்
அவர்கள் கனாக்காண்கிறார்கள்.
மறக்கடிக்கப்பட்டுப்போன
பழைய பழகிய முகங்களும்,
பழைய பழகிய வினோதங்களும்
அவர்தம் கனவில் மிதந்தபடியிருக்கின்றன.
யாருக்கும் சஞ்சலங்கள் இல்லை;
யாரும் யாரதும் கட்டளைகளுக்குக் கீழுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிராகி!

*Soundararaj*

இருண்ட முகிற்கூட்டங்கள்
கோபம் மிகக்கொண்டு
மழைக் குண்டுகளை
சுட்டு வீழ்த்துவது கண்டு
என் குழந்தை விசாரித்தது:-
"கடவுள் ஏன் கண்கலங்குகிறான்?"

என்ன பதில் நானளித்திட முடியும்?

முத்து முத்தாய்ச் சிதறிய பனித்துளிகள்
புல் வாளிடம் மண்டியிட்டுப் பணிதல் கண்டு,
என் குழந்தை அடம்பிடித்தழுதது,
"அவைகளை சேகரித்து
எனக்கொரு முத்துமாலை செய்து தருவாயா?"

நான் என்ன செய்திட முடியும்?

மாலைநேர சாயும் சூரியன்
ரத்தச்சிவப்பால் மேற்கினை
நிறந்தீட்டிக் கொண்டிருப்பது கண்டு,
என் குழந்தை என்னை விசாரித்தது:-
"யார் சூரியனைக் கொன்றொழித்தவர்?"

நான் என்ன பதில் அளித்திட முடியும்?

•

இந்தப் பூக்களை, கனிகளை, இன்னும்
நீ சொன்னதனைத்தையும் படைத்தவன்
கடவுளடீ கண்ணே..நான் சொன்னபோது,
என் குழந்தை நச்சரித்தது என்னை:-
"எனக்குக் கடவுளைக் காட்டு."

நான் என்ன செய்திட முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவையின் திருமணம்

மூலம்: ***Divik Ramesh (in Hindi)***
ஆங்கிலத்தில்: ***Arun Sedwal***

பறவைக்கு,
கணவன் வீட்டு விருந்துபசாரங்களில்லை.

பறவைக்கு,
புத்தம் புதிதோர் குடும்பத்தில்
வாழப்போக வேண்டியதில்லை.

பறவைக்கு,
சீதனங்களேதுமில்லை.

பறவைகள்,
நாணப்பட்டு, வெட்கி,
கன்னம் சிவப்பதில்லை.
ஆயினும்,
பறவைகள்
திருமணம் செய்து கொள்கின்றன.
மழையும் பெய்கிறது.

மழை பெய்கிறது:
வினோத உடைகளேதும்
இந்தப் பறவைக்கு இல்லை.

பறவை
பறக்கிறது,
நிர்வாணமாய்,
முழு நிர்வாணமாய்
பறக்கிறது,
பறவை.

பறவை
தற்கொலையென்று
எதுவும்
செய்து கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Margot Heinemann* க்கு.....

***John Conford***

இதயமற்ற இவ்வுலகின் இதயமே,
அன்பான இதயமே,
உன் ஞாபகம் ஒன்றே
என் பக்க வேதனையாயிருக்கிறது.
அந்த நிழல் என் பார்வைக்கு
குளிரூட்டுகிறது.

அந்திப் பொழுதில் வீசும் காற்று,
இலையுதிர்காலம் அண்மித்து விட்டதை
சொல்லிச் செல்கிறது எனக்கு.
உன்னை இழந்து விடுவேன் என்று
நான் அஞ்சுகிறேன். கூடவே,
என் அச்சம் பற்றியும்
நான் அஞ்சியபடியிருக்கிறேன்.

'ஹியுஸ்கா'வுக்கான கடைசி மைல்தனில்,
நம் பெருமைக்கான கடைசிவேலி
இடப்பட்டிருக்கிறது.
நீ என் பக்கமிருப்பதாய் நான் உணருவதை,
எனதன்பே, மிகக் கருணையோடு
எண்ணிக்கொள்.

என் பலத்தை ஆழமற்ற வெறும் புதைகுழிமீது
கிடத்த வேண்டுமென்று துரதிஷ்டம் கருதிவிட்டால்,
உன்னால் முடிந்த நல்லதனைத்தையும்
ஞாபகத்தே கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Huesca (ஹியுஸ்கா) ஸ்பெயினில் உள்ள ஒரு நகரம். 1936ல், ஸ்பானிய ஜெனரல் ஃப்ராங்கோ, ஹிட்லர் மற்றும் முஸோலினியின் உதவியுடன், ஸ்பெயினின் ஜனநாயக அரசுக்கெதிராக ஒரு இராணுவப்புரட்சியை ஆரம்பித்தான். எழுத்தாளர்களும், கலைஞர்களும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த பலரும் பாஸிஸத்துக்கெதிராக, ஸ்பானிய ஜனநாயகத்தின் பக்கம் நின்று சண்டையிடும் பொருட்டு, ஸ்பெய்ன் சென்றார்கள்.அதில் பங்கு வகித்த John Cornford ஒரு இளம் ஆங்கிலேயர்; அற்புத அறிவு மிளிரும் மாணவர்; சிறந்த எழுத்தாளர். ஸ்பெய்ன் நுழைவாயில் முன் நின்று, தன் காதலிக்கு அவர் எழுதிய கவிதை இது. தன் இருபத்தோராம் வயதில், அதாவது, இதை எழுதிய சற்றைக்கெல்லாம் துரதிஷ்டவசமாக அவர் கொல்லப்பட்டார். An Anthology of Literature in English நூலரிலிருந்து பெறப்பட்ட கவிதையிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்!

மூலம்: ***Mahadeviyakka***
ஆங்கிலத்தில்: ***A.K.Ramanujan***

பரம்பொருளே!
நூலால் தன் ஊன் உருக்கி,
கொஞ்சம் கொஞ்சமாய்
தனக்குள் செத்தழிந்தபடி,
திருகித் திருகிச் சுற்றி
காதலினால்
தன் இல்லம் கட்டும்
பட்டுப்பூச்சியின் வேட்கை போலும்,
மனம் வேண்டிநிற்கும் ஆசைகளினால்,
நான் எரிந்தபடியிருக்கிறேன்.
ஹிருதயவெளியை
நிரப்பி நிற்கும் பேராசைகளை அழித்து
மல்லிகை போலும் தூயிருக்கும்
நின் பாதை தனை
எனக்கும் காட்டுக
பரம்பொருளே...!



12ம் நூற்றாண்டில் கன்னட மொழியில் எழுதிய இந்தியப் பெண்கவி மகாதேவியக்கா. சிவபக்தையான இவர், தனது கவிதைகளில் அதிகமாக சைவநெறியைப் பாடியுள்ளார். மேற்படி அவரது கவிதை ஆங்கிலத்தில் A.K.ராமானுஜத்தால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..........................

*Ingrid Piying Lia*



இவ்வையகத்தை மூடியிருக்கும்
இருளை நான் உணர்கிறேன்.
இவ்விருட்டு,
சூரியன் மறைந்தமையால் உருவானதோ
அன்றி, என் கண்கள்
மங்கிப் போனதால் உருவானதோ அன்று.
இத்தனிமை நிறையிரவில்,
மேலோட்ட அலங்காரத்துக்கெலாம் பின்னே,
வெளிறிப்போன, வீணடிக்கப்பட்ட
அம்முகங்களை நான் கண்டேன் ஆதலால்
உருவானது இவ்விருட்டு.
என் கண்ணீர் முடிவுற்றுப் பெருகுகின்றது.
ஏனெனில், என் சகோதரிகளின் அழுகுரல்களை
நான் கேட்கிறேன்.
அன்பானவளே சொல்,
இப்பெருந் துயரங்களுக்கெல்லாம்
யார் காரணம்?

பாலியல் துஷ்பிரயோகங்களுக்காளான இளம் பெண்களுக்காக குரல் கொடுத்து வருகின்ற Ingrid Piying Lia தாய்வான் நாட்டின் சமூக சேவகராவார். தாய்வானின் 'Rainbow Project' மூலமாக இவர் இதுமாதிரியான பெண்களுக்காக சமூகசேவை புரிந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்திருப்போர் தம் பாதை

*Guillerimo E. Varela*

இந்தப் பகலின் பிற்பகுதி
மிகவும் சோகமயமாகயிருக்கிறது.
அந்தச் சோகங்கள்
எனக்குச் சுமையேற்றியிருக்கின்றன.

சுற்றியிருக்கும் எல்லாத்தளைகளையும் விட்டு,
அப்பால் சென்றிட நான் ஆசைப்படுகிறேன்.
என்றுமே மீண்டுவாராமல்,
நிரந்தரமாய் அப்பால் சென்றிட
நான் ஆசைப்படுகிறேன்.

வெறுமையையும்,
தவறாய்ப் புரிந்துகொள்தலையும்
மட்டுமே காணமுடிந்த,
வேதனைகளையே கொணர்ந்துகொட்டிய,
பழைய பயணப்பாதைகளின்
ஞாபகங்கள் விட்டொழிந்து,
முன்னொருபோதும் நானறியாப் புதுப்பாதையிலே
நான் நடக்கவாசைப்படுகிறேன்.

ஏனெனில், ஜீவிதத்தின் பயணப்பாதையெங்கிலும்
நிரம்பிக்கிடந்தது,
முட்கள் குத்திய ஹிருதயமும்,
தன்னந்தனியே நமைப் போராடவைத்து,
காயப்பட்டுச் சிதைந்துபோன ஆத்மாவும்தான்.
அவைகள் மட்டும்தான்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சந்தியாகால மாலையில்...

*Anonymous children*
*( in Terezin Concentration Camp)*

சூரியன் சுடும் ஊதாநிற அந்திமாலையில்,
பூப்பூத்து விரிந்துகிடக்கும் வாதைமரத்தடியில்,
தூசி படிந்த வாயிற்படி நேற்றும், இன்றும்
எல்லா நாட்களும் ஒன்றுபோலவே.......

எழிற்சிதறல்களென விருட்சங்கள்
மலர்களைப் பரத்தியிருக்கின்றன.
அந்தத் தோப்பு வழியெலாம்
அழகே சிதறிக்கிடக்கிறது.
அப்பசும்பொன்னின் சாம்ராஜ்யத்துள்
எட்டிப்பார்க்கவும் அச்சப்பட்டபடி நான்.

சூரியன் பொற்றிரை இட்டிருக்கிறது.
என் மேனியெங்கும் ஆனந்த வலியெடுக்கிறது.
வானம் நீலம்பரத்தி விரீச்சிட்டுக்கிடக்கிறது.
என் தவறுகளை எனக்குள் சமாதானப்படுத்தி
சிரித்துக்கொள்கிறேன்.
புலர்ந்து கிடக்கும் உலகம் புன்னகைத்தபடியிருப்பதாய்
எனக்குத்தோன்றுகிறது.
நான் பறக்க வேண்டும்.ஆயினும்,
எந்தளவு உயரத்துக்கு....? புரியவில்லை.
முட்செடிகளுக்கு நடுவேயும்
பூக்கள் புஷ்பிக்க முடியுமெனில்,
ஏன் என்னால் முடியாது? இல்லை,
நான் இறக்கப்போவதில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன உக்கிரம்.

*Greta Cordeiro*

சந்தோசங்களுக்குள் அமிழ்ந்து
சிலிர்த்துக்கிடந்த காலங்கள்
தொலைந்து போயின.
வாழ்க்கை இப்போதெல்லாம்
ரொம்பச் சோகமயமாயிருக்கிறது.
அச்சங்களின் ஊர்வலத்தில்
தற்கொலையின் ஞாபகங்கள் எழுகின்றன.
குழப்பங்களால் என் மூளைக்குள்
புயலடிக்கின்றது.
பரந்து விரிந்த இவ்விசித்திர பேரண்டத்தில்,
வெறுமை நிறை இதயத்தோடு வாழ்தல்
எத்தனை துன்பமயமானது?

எனவே,
தனிப்பெரும் பேரானந்தத்திலிருந்தபடி,
எனதான காதலை வெகு சீக்கிரமே
மரணிக்கச் செய்ய முயற்சித்தபடி,
உனக்காக நான்
பிரார்த்தித்துக் கிடக்கிறேன்.
உன்னை மறக்க முயற்சித்தபடியே
இரவிறக்கும்வரை நான்
என் படுக்கையில் தலைசாய்த்து
விழித்துக்கிடக்கிறேன்.

தயவுசெய்து, என்னை மீண்டும்
தொல்லைபடுத்தாதே!
என் இதயம் மீது தங்கியிராதே!
ஏனெனில்,அது
பைத்தியக்காரத்தனமாயிருக்கலாம்.
பிரிதல் துயரமேயாயினும்,
தீமைகள் அவற்றின் முடிவுகளைக்
காணல் வேண்டும்.
எனவே,
கொஞ்சம் அறிவுக்கூர்மையோடு
புதிதாய் வாழ ஆரம்பி.
மிகப்பெரிதாய் சாதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியவையினுதவி எத்தனை
வேண்டற்பாலது நாமறிவோமில்லையா?
நீ முன்னொருபோது
என்னை நேஸித்தாய். ஆயினுமன்பே!
எத்தனை நிஜமாய் என்னால் உனை
நேஸிக்கமுடிந்ததென்பதை,
உனக்குப் புரியவைக்க
நீயெனக்கு வாய்ப்பளித்தாயில்லை.
ஏனெனில்,
செல்வத்துக்காகவும்,வெளிப்பூச்சுக்காகவும்
நீ வாழ்ந்திருந்தாய்.
உனை நிஜமாய் நேஸித்த ஒரு இதயத்தை
துண்டு துண்டாய் கிழித்துப்போட்டுவிட்டு,
ஐயங்களுக்குள் ஓடிச்சென்று
நீ மறைந்து கொண்டாய்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகங்கள்

*Kirthi Sharma*

ஆங்கொரு மூலையில்,
என் தங்கை கைவிட்டுப்போயிருந்த
பொம்மைக்குட்டி
நேற்றென் ஞாபகங்களது ஆழத்தை,
துப்பாக்கியின் ரவைகள் போல
துளைத்துப்போயின....
என் நினைவுகள்
நீண்ட ஆற்றுவழி சென்று விழுந்தன.

வழியும் மூக்கோடு விளையாடிய நண்பனோடு
காணாமற்போன பந்து தேடியலைந்து,
வாய்வழி வழிந்துவிழ ஐஸ்கிறீம் சாப்பிட்டு,
'அம்மா அப்பா' விளையாடி,
'சொக்லேட்டு'க்காய் சண்டைகள் பிடித்து,
கடலோரத்தே சிப்பிகள் சேகரித்து.....

எங்கே அந்த ஆனந்தமான நாட்கள்?
ஞாபகங்கள் எனை வதைக்கின்றன.
நினைவுகள் கண்ணீர் கொணர்கின்றன,
எனைச்சுற்றிலும் குழந்தைகள்
விளையாடுவது கண்டு......

L. 11484





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கௌதமாலாக் கவிதை

*Otto Rene Castillo*

ஒரு நாள்
எளிமையான எம் மக்களால்,
எமது தேசத்தின்
அரசியல் ஞானப்பொக்கிஷங்கள்
வினவப்படலாம்; விசாரிக்கப்படலாம்.
மெதுமெதுவாய்,
தீயணைந்ததுபோல,
தம் தேசமக்கள்
கொஞ்சம் கொஞ்சமாய் இறந்தபோது,
அவர்கள் என்ன செய்தனரென்று
கேட்கப்படலாம்.
அணிந்தழகு காட்டிய ஆடைகள் குறித்தோ,
பகலுணவின்பின் கொண்ட
பதவிசான உறக்கம் குறித்தோ,
யாரும் அவர்களைக் கேட்கப்போவதில்லை.
எந்த நல்விளைவையும் கொணரா அவர்தம்
வெற்றுப் போராட்டங்கள் குறித்து,
எவரும் அறிய வேண்டுமென்ற ஆவலில்லை.
நிதியியலில் அவர் மேற்கொண்ட
உயர் கற்கைநெறிகள் குறித்தும்,
யாரும் கவனம் கொள்ளும் நிலையிலில்லை.
கிரேக்க நாகரீகப் புராணக்கதைகள் குறித்தும்,
அவர்களை எவரும் கேட்கப்போவதில்லை.
கோழைத்தனமான மரணமாய்,
தம் உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாய்
தமக்குள் சாக ஆரம்பித்தபோது,
நெஞ்சுக்கூட்டுக்குள் நிறைந்து கிடந்த
அவர்தம் சுயவெறுப்புகள் குறித்தும்
அறிய வேண்டுமென்ற அக்கறையில்லை.
மொத்தப்பொய்களின் நிழலில் பிறந்த
அசட்டுத்தனமான அவர்தம் தீர்ப்புகள் குறித்தும்
அவர்கள் வினாத்தொடுக்கப்படப்போவதில்லை.
அந்நாளில்
ஒரு எளிமை நிறைந்த மனிதன் வருவான்.
அரசியல் ஞானப் பொக்கிஷங்களுக்காக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலென்றும், பாணென்றும் பசிபோக்கும்
பல உணவுகள் கொணர்ந்து கொடுத்த,
அவர்தம் ஆடைகளைத் தைத்துக் கொடுத்த,
அவர்தம் வாகனங்களை ஓட்டிய,
அவர்தம் பாசப்பிராணியாகிய நாய்கள்மீதும்,
அவர்தம் தோட்டங்கள் மீதும் கவனம்செலுத்திய,
அவர்கள் பொருட்டே வாழ்நாளெலாம் உழைத்த,
எனினும், அவர்தம்
புத்தகங்களிலோ, கவிதைகளிலோ
துளியிடமும் பெற்றிலா
ஒரு எளிய மனிதன் வருவான்.
அவர்கள் கேட்பர்:-
ஏழைகள் பிணியில் வாடியபோது,
வாழ்வும், வனப்பும்
வறுமைத்தீயில் பற்றியெரிந்தபோது,
நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

என் திருநாட்டின்
அரசியல் ஞானப்பொக்கிஷங்களே!
உங்களால் விடை சொல்ல முடியாது.
உங்கள் குடல்களை
ஒரு மௌனக்கழுகு வந்து உண்ணும்.
உங்கள் சொந்தத் துன்பங்கள்
உங்கள் ஆன்மாவைக் குத்திக் குதறும்.
நீங்கள் வெட்கித் தலைகவிழ்ந்து,
ஊமையாகிப் போவீர்கள்!!!




Richard De Zoysaவின் மேசைக்கு மேலே தொங்கவிடப்பட்டிருந்ததாம் இக்கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பேறி

*Pablo Neruda*

பூமிக்கும் கோள்களுக்குமிடையிலான
மனிதனின் பயணம் தொடங்கியாயிற்று.
களைத்துச் சலித்த மாந்தர்
அமைதி குடிகொண்ட நிலவைக்
குழப்பியடித்து, அவர்தம்
போதைப்பொருட்களுக்கும் இதரபிற
வியாபாரப் பண்டங்களுக்கும்
அங்கே கடை விரித்தாயிற்று.

முதிர் திராட்சை
பூமியெங்கும் விளைந்து கிடக்கிறது,
இப்போதிங்கே.
கடலுக்கும்,
'கோர்டிலெராஸ்' மலைகளுக்குமிடையே
திராட்சைரசம் வழிந்தோடப்போகின்றது,
இனியிங்கே.

என் அன்னை பூமிமீது
'செர்ரி'ப் பழங்களின் நர்த்தனங்கள்.
என் கறுப்புச் சிறுமியரின் இசைப்பாடல்கள்.
அவர்தம் இசைக்கருவி மீதில்
பட்டுப் பளபளக்கும் நீர்த்துளிகள்.

திராட்சை ரசம் இங்கே விதவிதமாய்,
அற்புதச்சுவையில் நா ஊற
அருந்துவோன்தனைக்
கிறங்கச் செய்யும் விதமாய்.

கடலும், நிலமும்
கொண்டதென் இல்லம்.
கபில நிறத்து விதையென
அழகிய கோலம் காட்டும்
என் பெண்மணியின்
உருண்ட பெரிய கண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமையும், வெண்மையுமாய்,
தனக்குத்தானே
ஆடையணிவித்துக்கொள்ளும்,
இரவில் நான் காணும் கடல்.
நிலவொளியில்,
கடல் சென்ற மணப்பெண்ணாய்
உறங்கும் அலை நுரைகள்.
இல்லையில்லை,
நான் என் கிரகத்தை
மாற்றிக் கொள்ளப்போவதில்லை!!!

## *Pablo Neruda –*

1940-1973 இல் வாழ்ந்த சிலி தேசத்தின் அற்புதக் கவிஞர்.1971 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்றவர். நவீன உலகின் அற்புதமான இலத்தீன் அமெரிக்கக் கவிஞராகக் கரு தப்படுபவர். அவரது கவிதைகள் அவருக்கு இருபது வயதாவ தற்கு முன்பே பிரசுரிக்கப்படுமளவுக்கு பேசப்பட்டவை.அவரது சுயசரிதம் சொல்லும் கவிதைத்தொகுதி,1982இல், அவரது மரண த்துக்குப் பின்னர் பிரசுரமானது. சிலி நாட்டின் கல்வியியலாளரும் கூட. வன்முறையையும், குழப்பத்தையும் உணர்ச்சித் ததும்ப எதிர்க்கும் தொனி அவரது கவிதைகளில் விரவிக்கிடக்கக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள்.

***Hallmark***

கடந்த காலத்தே நமக்கிடையே நீடித்த
நேஸத்தைப்பற்றி உன்னோடு பேசவேண்டுமென்று நான்
ஆசைப்படுகிறேன்.
அனைத்தையுமப்படியே உணரச்செய்ய கடினமாயினும் நான்
ஆசைப்படுகிறேன்.
கடந்தகாலம் வழமையில் முக்கியமன்று.
ஆயினும், இன்றைய உலகுக்கது முக்கியம்.
நமக்கிடையே என்ன நிகழ்கிறதென்பதில்,
நான் கவனம் செலுத்துகிறேன்.
நானும், நீயும் நீண்டகாலம்
இணைந்திருக்க வேண்டுமென்று
நான் ஆசைப்படுகிறேன். எனவே,
இன்னும் அப்பால் விலகிப்போகுமுன்னர்
பேசுவோம் நீயும், நானும் பேசுவோம்.

நாம் நெடுங்காலமாய்
ஒன்றாய் இணைந்திருக்கிறோம்.
என்னைப்பொருத்தவரை அந்தக்காலங்கள்
மிக அழகானவை.
ஏனெனில்,
முழுக்காதலையும், முழு சந்தோசத்தையும்,
முழு கதகதப்பையும்
நாம் பரிமாறியிருக்கிறோம்.
எனக்குத்தெரியும் இன்றைய உலகில்
இந்தச் சத்திய வாக்குறுதி
வெற்று விடயமாயிருக்கலாம்.
நேஸ உறவுகள் எப்போதும்போல,
நிச்சயமற்றுப் போனாலும்,
அவை செயற்பட
நீண்டகாலம் எடுத்தாலும்,
வாக்குறுதிகள் தவிர்க்கப்பட வேண்டியவையென்று நான்
ஒருகாலும்
சொல்லமாட்டேன். அது
பெரிய நடவடிக்கை.அது
அழகானதன்று; கம்பீரமானதுமன்று.
ஆயினும், அது பெரிய நடவடிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேஸத்தில், நேஸ உறவில் எனக்கு
எழுதிவைக்க நிறைய இருக்கிறது.
எதிர்காலத்தில் எனக்கு அதற்கு
வாய்ப்பின்றிப் போய்விடலாம்.
அருகாமையையும், மகிழ்வையும் அனுபவிக்க நான் நிஜமாய்
நிகழ்த்தப்படும் நேஸத்துக்காய்,
என் நேரத்தை முழுதாய்
அர்ப்பணித்து விடலாம். இன்னும்,
ஒரு லட்சியம் நோக்கி முன்னேறும்
பயணந்தானா நமதானது என்பதையறிய,
நான் ஆவல் கொள்கிறேன். எனவே,
உன்னிடம் கெஞ்சிக்கேட்கிறேன்.
உனக்கு நிஜமாகவே எது தேவையென்பதை
நேரமெடுத்துச் சிந்தி. மேலும், நீ உனக்கு
எப்போதும் உண்மையாயிரு.
நான் உன்னையும், நம்மையும்
மிக நேஸிக்கிறேன்.
காதலால் எந்தளவு முடியுமோ
அந்தளவு அழகான, வளமான
ஒரு நேஸத்தைப் பகிரவே
நான் ஆசைப்படுகிறேன்.

இது போன்று நாம் ஒருவரையொருவர்
காயப்படுத்திக் கொண்டிருப்பது,
என் இதயத்தை நொறுக்குகிறது.
வாதிடுவதைத் தவிர்க்கலாமென்று
எனக்குப்படுகிறது. எனவே,
நாமிருவரும் இணைந்திருப்பது
இப்போதைக்குத் தேவையில்லையென்று
எண்ணுகிறேன் நான். சிலவேளை,
என்றேனும் ஒருநாள் நாம் மீண்டும்
சந்திக்க நேரலாம். அப்போது,
எல்லாமே சரியாகிவிடலாம்.
நம் வாழ்வில் அப்போது
நற்காலம் பிறக்கலாம். ஆயினும்,
இப்போதைக்கு நாம் ஒருவருக்கொருவர்
'குட்-பை' சொல்லல் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலையுதிர்காலம்

*T.E. Hulme*

இலையுதிர்கால இரவின்
குளிர் ஸ்பரிசம்.
பரந்த வெளியெங்கிலும்
நான் நடந்தேன்.
விவசாயியின் சிவந்துபோன முகமென
புதர்களுக்குமேலே சாய்ந்து கிடந்த
சிவப்புநிலா கண்டேன்.
பேசுதற்காய் நான் நிற்கவில்லை.
எனினும் தலையசைத்தேன்.
நகர்புற பிள்ளைகளின்
வெள்ளை முகங்களென
சுற்றிலும்
ஏக்கம் நிறைந்து மின்னும் தாரகைகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக்குரல்

***Navajo Indian***

அந்தக் குரல்
இந்த பூமியை அழகுபடுத்துகிறது.
மேலிருந்து ஒலிக்கும் அந்தக் குரல்
இருள் முகில்களுக்கிடையே
மறுபடி மறுபடி ஒலிக்கும்
இடியின் குரல்
இந்தப்பூமியை அழகுபடுத்துகிறது.

அந்தக் குரல்
இந்தப்பூமியை அழகு படுத்துகிநது.
கீழிருந்து ஒலிக்கும் அந்தக் குரல்,
புல்வெளிகளுக்கும், பூக்களுக்குமிடையே
மறுபடி மறுபடி ஒலிக்கும்
வெட்டுக்கிளியின் குரல் அழகுபடுத்துகிறது,
இந்தப் பூமியை!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை முகில்களுக்குப்பின்னால் மறைந்துபோன சூரியனுக்கானதோர் பாடல்

மூலம்: ***Primitive African(Hottentot)***
ஆங்கிலத்தில்: ***Ulli Beier***

அந்தத் தோப்பு இருள் ஊட்ட
தோப்புவெளியெங்கிலும்
கருமை படர்கிறது.
தீச்சுவாலை அணைய
துரதிஷ்டம் எம்மைச் சூழ்கிறது.
சூரியனைத் தேடிய
கடவுளின் பயணம் ஆரம்பமாகிறது.
வானவில்,
சுவர்க்கத்து வேட்டைக்காரனின்
வில்லென்றான அவன் கரங்களில்,
ஒளிர்ந்து மின்னுகிறது.
தன் குழந்தைகளின்
துயர அழுகுரல்களை
அவன் கேட்டிருக்கிறான்.
வானவீதி வழி நடந்து,
நட்சத்திரங்களை அவன் சேகரிக்கிறான்.
அவசரமாய் அவற்றை
தன் கூடைக்குள் குவிக்கிறான்,
தன் வேகமான கரங்களால்.
கூடை பல்லிகளால் நிரம்பி வழியும்வரை
குவிக்கும் அந்தப் பெண்ணைப் போல,
அவன் அவற்றை நிரப்புகிறான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயங்காலத் தீவு

மூலம்: ***Harry Martinson (Swedish)***
ஆங்கிலத்தில்: ***May Swenson***

அமைதியானதோர் விடுகதை பிரதிபலிக்கிறது.
அமைதிமிக்க நாணல்மீதில்,
மாலைப்பொழுதை
சுழற்றிப் பின்னுகிறது அது.
புல்லின் வலைப்பின்னலில்,
யாருமே கவனிக்காத
மென்பட்டுத் துணியொன்று கிடக்கிறது.
வியப்போடு பார்த்தபடி,
அமைதிமிக்க மாலைப்பாழுதில்,
நீர்த்தேக்கம் நோக்கி விரையும் மந்தைகள்.
அந்நீரேரியோ எல்லா வாய்களுக்கும்
அள்ளியிறைக்கிறது,
தன் ராட்சதக் கரண்டியை!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரங்கள் - பாடல்கள் - முகங்கள்

*Carl Sandburg*

நட்சத்திரங்கள் சேகரி,
நீ அவற்றை மிகவும் விரும்பினால்.
பாடல்கள் சேகரித்துவை.
பெண்களின் முகங்களையும் சேகரித்துவை,
காலாகாலங்களுக்குமாக!

பிறகு,
உன் கைகளை விடுவித்து,
செல்வதற்கு வழிவிடு.
நட்சத்திரங்களும், பாடல்களும்
செல்லட்டும்.
முகங்களும், காலங்களும்
போகட்டும்.
கைகளை விடுவி.
விடைபகர் நிரந்தரமாய்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த வானம்

மூலம்: ***Primitive African(Ewe)***
ஆங்கிலத்தில்: ***Ulli Beier***

மனுஷர்களும், மிருகங்களும்
நிரம்பியிருக்கும்
பெரு நகரம்போல,
இரவில் அதோ அந்த வானம்.
ஆனாலும்,அங்கே யாரும்
ஆட்டையோ, கோழியையோ
கொன்று குவிப்பதில்லை.
கரடிகள் இரைக்காய் என்றும்
எவரையும் கொன்றதில்லை.
அங்கே விபத்துக்களில்லை.
எனவே இழப்புகளில்லை.
எல்லாமும், எப்போதும்
தம் வழிகள்தமை
தெரிந்து வைத்திருக்கின்றன.!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


- LOVE POEMS Presented by The German Cultural Institute And The English Assoiation of SriLanka
- A Selection of ENGLISH POETRY Edited by Rajiva Wijesinghe
- An Anthology of CONTEMPORARY SRILANKAN POETRY IN ENGLISH Edited by Rajiva Wijesinghe
- THIS OTHER EDEN The collected poems of Richard de Zoysa Edited by Rajiva Wijesinghe
- MAN IN THE POETIC MODE editor Joy Zweigler
- INDIAN LITERATURE March-April 1983 published by Sahitya Academi , New Delhi
- PALESTINIAN POETRY Edited by T.Jayasinghe
- WHEN THE EARTH WAS YOUNG Songs of the American Indian Collected by David Yeadon
- MIRROR MAGAZINE , May 1995
- AN ANTHOLOGY OF LITERATURE IN ENGLISH
- POETRY OF D.H. LAWRENCE
- THE ILLUSTRATED WEEKLY OF INDIA, November 28th. 1969
- HARPERS MAGAZINE , May 1991


L.11484



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கெகிராவ ஸுலைஹா

பண்டைச் சிறப்புமிக்க கிரேக்க, எபிரேயிய, ஆரியசீன, லத்தீன் மொழிகளுடன் இணையாகக் கொள்ளக் கூடிய செழுமை நிறைந்த மொழியே தமிழ் மொழி. தமிழ் மொழியின் வரலாறு இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்டது எனினும், சில மொழிகளில் மிக இயல்பாக வெளிக்கொணர முடிந்த பல விடயங்களைத் தமிழில் கொண்டு வருவது கடினமாகவே இருக்கிறது. உதாரணமாக, பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகவே தோன்றியிருப்பினும், ஆங்கில மொழியின் எல்லைகள் பரந்து விரிந்திருப்பதைச் சாதாரண மொழியறிவு படைத்தோரும் விளங்கிக் கொள்ள முடியும்.

ஆங்கிலம் மிக இயல்பாக மனதைத் தொடுகின்றது. இயல்பாக மன உணர்வுகளை வெளிக்காட்டுகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்ற சிறுவர் பாடல்களும், சிறுவர் கவிதைகளும் கூட அம்மொழி மீதான மதிப்பையும் பிரமிப்பையும் அதிகப்படுத்துகின்றன. அத்தகைய ஆங்கில மொழியின் வழி, பலவேறு நாட்டுக் கவிஞர்களின் தரமான கவிதைகளைத் தமிழுக்குத் தந்திருக்கிறார் கெகிராவ ஸுலைஹா. அறிவும், அழகும் பொங்கி வழிகின்றன. கவிதைகளின் அடிக்குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கும் படங்களும் சிலிர்க்க வைக்கின்றன.

கெக்கிராவ ஸஹானா

ISBN 978-955-51679-2-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org